Registered as a Newspaper in Ceylon ✭ விலைசதம் 10

# ஈழநாடு

EELANADU

தபாற்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 10
இதழ் 118
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் சேசு வைகாசி 26 ரபி: அவ் 11 சனிக்கிழமை (8-6-68)

ஆதரவாளர்கள்
அன்பர்கள் அனைவருக்கும்
எமது
மீலாத் வாழ்த்துக்கள்

கே. என். எம்.
மீருன் சாஹிப்
தங்கப்பவுண் நகை மாளிகை
கன்னாதிட்டி, - யாழ்ப்பாணம்.
போன்: 585

மாவட்டசபை வெள்ளையறிக்கை

# இன்றுவிவாதம்; எதிர்க்கட்சி எம்.பி.க்கள் (ஆர்.ஜி. தவிர) பகிஷ்கரிப்பு

மாவட்டசபைகளில்

## உள்ளூராட்சி சேவை ஊழியருக்கு இடமில்லையா

### குறையைநீக்குமாறு பிரதமருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், சனி

'உத்தேச மாவட்டசபை மசோதாவில் உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள் கடமை யாற்றுவதற்கான ஷரத்துக்கள் சேர்க்கப்படாததையிட்டு வருத்தமடைகின்றோம். இக்குறையை நீக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.'

ஜனநாயக உள்ளூராட்சி மன்ற எழுதுவினைஞர் சங்கம் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

'மாவட்டசபைகள் நிறுவப்படும்போது பல்வேறு பகுதிகளிலும் உள்ளூராட்சி மன்ற ஊழியர்களை சேவைக்கு அமர்த்தப் படாதவிதத்தில் புறம்பாக விடப்பட்டுள்ளனர். மாவட்டசபை மசோதா உள்ளூராட்சி அமைச்சின் ஒரு மசோதாவாகும். ஆதலால் உள்ளூராட்சி மன்ற ஊழியர்களும், அரசாங்கசேவை ஊழியர்களுடன் சேர்ந்து கடமையாற்றச் சந்தர்ப்பம் தரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

பத்திரிகையாளர் மாநாட்டில் உள்ளூராட்சி மன்ற ஊழியர்களுக்கும், அரசாங்க ஊழியர்களுக்கும் மாவட்ட சபைகளில் கடமையாற்றச் சந்தர்ப்பம் அளிக்கப்படும் எனத் தாங்கள் தந்த வாக்குறுதியை நிறைவேற்றுங்கள்.

தற்பொழுதுள்ள நிலைமையைச் சீர்தூக்கிப்பார்த்து, மாவட்டசபைகளில் அரசாங்கசேவைக் குமாஸ்தாக்களுடன் உள்ளூராட்சிமன்ற ஊழியர்களும்கடமையாற்ற வழிசெய்யுங்கள்.

சத்திர சிகிச்சைக்கு வந்த

## 10 நோயாளர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்

### யாழ். ஆஸ்பத்திரியில் சம்பவம்

யாழ்ப்பாணம், சனி

சத்திர சிகிச்சைக்குக் கொண்டு செல்லப்பட்ட 12 நோயாளிகளில் இருவருக்கு மட்டும் சத்திரசிகிச்சை செய்யப்பட்டதாம். மிகுதி 10 நோயாளிகளும் திருப்பி அனுப்பப்பட்டார்களாம்.

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் நடைபெற்ற இச் சம்பவம்பற்றி நோயாளிகள் மத்தியில் பெரும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது சத்திர சிகிச்சைக்காக ஆயத்தம் செய்யப்பட்டு சத்திரசிகிச்சைத் தியேட்டருக்குள்ளும் கொண்டுசெல்லப்பட்ட பின்னர் சத்திரசிகிச்சை செய்யப்படாது 10 நோயாளிகள் திருப்பி அனுப்பப்பட்டனராம்.

சத்திரசிகிச்சைத் தியேட்டரில் போதிய தாதிகளும் வைத்தியதி உதவியாளர்களும் உபகரணங்களும் இருந்தபோதும் போதிய டாக்டர்கள் இங்கு இல்லாததே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது. இவ்விஷயம் தற்பொழுது வைத்திய இலாகாவின் தலைமைப் பீடத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாம். (சு, நி)

## இங்கிலாந்து-ஆஸி கிரிக்கெட் டெஸ்ட்

### ஆஸி:4 விக்கெட் நஷ்டத்துக்கு 393

மஞ்செஸ்டர், ஜூன் 7

இங்கிலாந்துக்கும், ஆஸ்திரேலியாவுக்கு மிடையே நேற்றுஇங்கு ஆரம்பமான முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் விளையாட்டின் முதல் நாள் ஆட்ட இறுதியில் ஆஸ்திரேலியா, நான்கு விக்கெட் நஷ்டத்துக்கு 393 ஓட்டங்களைப் பெற்றது.

முதல் இரண்டு விக்கெட்களையும் ஆஸ்திரேலியா சொற்ப ஓட்டங்களுடன் இழந்திருந்தது. ஆனால் பின்னர், ஆஸ்திரேலியா தடுப்பு வீரர்களான லோரியும், வாக் [illegible] 81 ஓட்டங்கள் எடுத்தனர்.

# ஹைட்பார்க்கில் எதிர்ப்புக்கூட்டம்

## நாடுமுழுவதும் பாதுகாப்பு நடவடிக்கைகள்

கொழும்பு, சனி

மாவட்டசபை பற்றிய வெள்ளை அறிக்கையும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள மாவட்டசபை நகல் மசோதாவும் இன்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப் படவிருக்கிறது. இன்று பிற்பகல் மக்கள் பிரதிநிதிகள் சபை கூடியதும் வெள்ளை அறிக்கை மீதான விவாதம் தொடங்கும்.

வெள்ளை அறிக்கை மீதான விவாதத்தில் எதிர்க் கட்சியினர் கலந்து கொள்ள மாட்டார்களென எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமா பண்டாரநாயகா ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## பகிஷ்கரிப்பதற்கு சிறிமா கூறும் விளக்கம்

திருமதி சிறிமா பண்டாரநாயகா தமது அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்திருக்கிறார்:

இந்த நாட்டைப் பிரிப்பதற்காக சமஷ்டிக் கட்சியினருடன் யு. என். பியினர் செய்து கொண்ட துரோகமான இரகசிய ஒப்பந்தத்தை அமுல் செய்வதன் அம்சம் தான் மாவட்ட சபை மசோதா.

மாவட்டசபைகள் அமைக்கப்படுவதை பெரும்பான்மையான சிங்கள மக்களும் முஸ்லிம் மக்களும் தமிழர்களில் ஒரு பிரிவினரும் வன்மையாக எதிர்க்கின்றனர். ஜனவரி 8-ம் திகதி தமிழ் மொழிச் சட்ட விசேஷ விதிகளை இராணுவம், பொலிசின் உதவியுடன் கொண்டுவந்து நிறைவேற்றிய அதே முறையில மாவட்ட சபை மசோதாவையும் கொண்டு வந்து நிறைவேற்ற அரசாங்கம் முனைந்திருக்கிறது. நாட்டிலுள்ள எதிர்ப்பைச் சமாளிக்க முடியாத யு. என். பி. யினர் அடுத்த தேர்தலில் மக்கள் முன் செல்வதற்காகவும் சமஷ்டிக் கட்சியினர் மக்கள் முன்செல்வதற்காகவும் மாவட்டசபை மசோதாவைக் கொண்டு வராமல் வெள்ளை அறிக்கையைக் கொண்டு வருவதற்கு ஓர் உடன்பாட்டுக்கு வந்தனர். இதன் விளைவுதான் இந்த வெள்ளை அறிக்கை.

வெள்ளை அறிக்கை மீது விவாதம் தான் நடைபெறும். அதன் மீது வாக்கெடுப்பு நடைபெறாது. இந்த விவாதத்தில் கலந்து கொள்வது அர்த்தமற்றது. எனவேதான் வெள்ளை அறிக்கை விவாதத்தில் நாங்கள் கலந்து கொள்ள மாட்டோம். ஆனால் மாவட்ட சபை மசோதா விவாதத்துக்கு வந்தால் அதில் கலந்து கொண்டு முழு மூச்சுடன் அதை நாங்கள் எதிர்ப்போம்.

## பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்வார்

இன்று மாலை ஹைட் பார்க்கில் எதிர்க்கட்சிக் கூட்டணியினரின் மாவட்ட சபை எதிர்ப்புக் கூட்டம் நடைபெறவிருக்கிறது. இக் கூட்டத்துக்கும்ஒலிபெருக்கி உபயோகிப்பதற்கும் பொலிசார் அனுமதியளித்துவிட்டனர். மாவட்டசபை வெள்ளையறிக்கைப் பிரதிகள் இக் கூட்டத்தில் தீ வைத்துக் கொளுத்தப்படுமெனத் தெரிகிறது.

வெள்ளை அறிக்கை மீது இன்று நடைபெறும் விவாதத்தில் தம்பதெனியா எம். பி திரு. ஆர். ஜி. சேனநாயகா கலந்துகொள்வார். இதற்காக அவர் எதிர்க் கட்சிக் கூட்டணியிடம் அனுமதிகோரியிருக்கிறார்.

## நிலைமையை சமாளிக்க பொலிசார் தயார்

எந்த நிலைமையையும் சமாளிப்பதற்கு பொலிசாரும் இராணுவத்தினரும் தயாராக வைக்கப்பட்டுள்ளனர். முக்கியமான இடங்

[8-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### அடகு நகை ஏலவிற்பனை

வெள்ளாந்தெரு 10 நீர். கடையிலிருக்கும் சி முத்துக்குமாருஅவர்களிடம் 1-1-65 முதல் 31-12.65திகதிமுடிய அடகுவைத்துமீட்கப்படாத நகைகள் யாவும் மேற்படி கடையில் 1968ம் வருடம் ஜூன்மாதம் 15ந்திகதிசனிக்கிழமை காலை10-00மணிக்கு என்னால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். 820

### JAFFNA COLLEGE

Undergraduate Department
G. C. E. (A L) Admissions

1. **First year Science Class**

Admission will be by Entrance test to be held on 10th June.

2. **1968 Examination Class (Science)**

A further set of admissions will be made till 12th June.
Enquiries in person

Registrar.

Vadducoddai. 818

# மாவட்ட சபைகள் பற்றிய சில தவறான கருத்துகள்

— எஸ். ஸி. பெர்னாண்டோ —
(முன்னாள் நிரந்தரக்காரியதரிசி உள்நாட்டமைச்சு)

யு.என். பி. கட்சியுடனே சுதந்திரக்கட்சியுடனோ பேரம் பேசுவதற்காகவே மாவட்டசபை விடயம் பயன்படுத்தப்பட்டதென்று கூறிவது, வரலாற்றிற்கு மாறானதாகும். 1928-ம் ஆண்டில்வெளியான டொனமூர் அறிக்கையிச் முதன் முதலில் மாகாணசபைகள் என்ற யோசனையைத் தெரிவித்தது. அதன்பின் 1939ம் வருடம் அரசியல் கட்சிகள் பிறப்பதற்குமுன்பே உள்ளூராட்சிமந்திரியாய்இருந்த திரு.பண்டாரநாயகா இந்த விடயத்தை அரசாங்க அதிபர் மகாநாட்டில் மிகதீவிரமாக விவாதித்தார். 1957ல் அவர் பிரதம மந்திரியான வுடன் பிரதேச சபை மசோதாவைத் தயாரித்து மே மாதம் அதை கஸற்றில் வெளியிட்டார். மாவட்ட சபை விடயம் பண்டாரநாயகா — செல்வநாயகம் உடன்படிக்கையின் ஒரு பகுதி என்று கூறுவதும் மிகத்தவறாகும். இவ்வுடன்படிக்கை ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருந்தநகல்மசோதாவை அடிப்படையாகக் கொண்டதே. காணி, குடியேற்றம் முதலிய விடயங்களை மாவட்சபைகளுக்கு கொடுத்துவிட்டால் வட-கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வசிப்பவர்களுக்கு ஒரு துண்டு நிலமும் கிடையாதெனப்பதை திரு. பண்டாரநாயகா உணராதபடியினால்தான் அவ்வுடன்படிக்கை கிழித்தெறியப்பட்டது. அப்பொழுது எதிர்க்கட்சியாயிருந்த யு. என். பி. தகுந்த காரணத்துடன்தான் இவ்வுடன்படிக்கை பிளவுபட்டு விடுமெனப் பிரசாரம் செய்தது.

பொதுஜன அபிப்பிராயத்துக்குப் பணிந்துதான் திரு. பண்டாரநாயகா அதைக் கைவிட்டாரென கூறுவதும் தவறு; ஏனென்றால் அவருடைய மனைவியாரின் அரசாங்கம் அவர் இறந்தபின்பு அவருடைய கொள்கையையே பின்பற்றுவதாகக் கூறி தொடர்ந்துவந்த சிம்மாசனப் பிரசங்கங்களில் எல்லாம் மாவட்டசபையையும், சேர்த்திருந்தது.

இச்சபைகள் மத்திய அரசாங்கத்தின் பூரண ஆதிக்கத்திலேயே இருந்துவரும் என்பதையும் சிலர் வேண்டுமென்றே பிரஸ்தாபிப்பதில்லை.

அரசியல், சாதி, சமயம் என்ற கேவலமான நோக்கங்களினால் இப்பொழுது ஏற்பட்டுள்ள ஆர்ப்பாட்டங்களுக்குக் காரணம் என்பதையும் நான் எடுத்துக்காட்டவிரும்புகிறேன்.

திரு. பண்டாரநாயகா ஒவ்வோர் அரசாங்க அதிபர் மாநாட்டிலும் நாட்டின் நன்மையையும், ஒற்றுமையையும், கருத்திலவைத்து மாவட்டசபை விடயத்தை துரிதப்படுத்துமாறு மாகாண ஆட்சிக்குப் பொறுப்பான அதிகாரிஎன்ற முறையில் என்னிடம் அடிக்கடி இரகசியமாக கூறுவார்.

இலங்கை முழுவதிலும் மாவட்டசபைகளை ஏற்படுத்திவிட்டால் 1956-ம் ஆண்டு தனிச்சிங்களச் சட்டத்தின் பின் மனங்கசந்துபோயிருக்கும் தமிழர் சமுதாயம் ஆறுதல் அடைந்து மத்திய அரசாங்கத்தின் குறுக்கீடு இல்லாமல் தங்களுடைய பொருளாதார, கலாச்சார விடயங்களைத் தாங்களே கவனித்துக்கொள்வார்கள் என்பதை அவர் ஒரு விசேடமாகக் காட்டினார். மத்தியில் எப்பொழுதுமே சிங்கள ஆதிக்கம் நிறைந்த அரசாங்கம் இருக்குமென்பது எல்லோரும் அறிந்த விடயம்.

இக்கருத்துக்கு மாறாக தமது மனைவியாருக்கு வீட்டிலே இரகசியமாக திரு. பண்டாரநாயகா ஏதாவது கூறியிருப்பாராகில் அதைப் பற்றி நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. இருப்பினும் திருமதி சிறிமாவோவின் அரசாங்கங்கள் மாவட்ட சபைகளை ஒவ்வோர் சிம்மாசனப் பிரசங்கத்திலும் புகுத்திவந்துள்ளன.

இலங்கைத் தமிழர் தென் இந்தியாவில் இருந்து இலங்கைக்குள் அத்துமீறிப் பிரவேசித்தவர்கள் என் அபிப்பிராயமும், குழப்பத்தை உண்டுபண்ணுவதாகும்.

சிங்களச்சட்ட மசோதா நிறைவேறிய அன்று காலி சுதந்திரத்துக்காக சிங்களவருடன் தோளோடுதோள் நின்று போர்புரிந்த வேராசிரியர் சுந்தரலிங்கம் போன்ற பல தமிழ்ப்பெரியார்கள் தமிழருக்கும் இந்நாட்டில் இடமுண்டு எனக் கதறியழுததை நினைக்கும்பொழுது மனச்சாட்சி உள்ள எந்தச் சிங்களவனும் வெட்கத்தால் தலைகுனியவேண்டும்.

சிறுபான்மையினரைவிட தாங்களே உயர்ந்தவர்கள் என்ற கருத்து பெருமை அறிவாளிகள் என கூறிக்கொள்ளும் பண்டிதர்களினால் உண்டானது. இவர்கள் வரலாற்றைப் புரட்டி விஜயன் என்ற ஒருவன் இலங்கைக்கு வந்த பின்னர் தான் இங்கே நாகரீகம் ஏற்பட்டதென்றும் அவன் வந்த சமயம்தான் புத்தபகவானுக்கும் ஞானோதயம் பிறந்து இலங்கையை ஒரு 'தர்மத வீபம்' ஆகும்படி ஆசீர்வதித்தாரென்றும் கூறிக்கொள்கிறார்கள். இவ்விரு சம்பவங்களுக்கிடையில் அறுப[illegible] வருட வித்தியாசம் [illegible]க்கிறதென்ற சரித்திர [illegible]மையை ஒருவரும் உண[illegible]தில்லை,

இப்படியான வீம்புப் பேச்சுக்கள் சிங்களவர்தான் உயர்ந்த சாதியென்ற கருத்துக்கு ஆதாரம்கொடுக்கமாட்டா.

மாவட்ட சபைகள் வந்தால் சிங்கள மொழி செத்துவிடும் என்று கூறுவது இன்னொரு அபத்தம். உண்மை என்னவெனில் இந்த நாட்டில் சகல கருமங்களும் சிங்கள மொழியொன்றிலேயே நடத்தப்படவேண்டும் எனச் சிலர்விரும்புகிறார்கள். இவர்களுடைய எண்ணத்தின்படி யாழ்ப்பாணத்துக் கள்ளுக் கொட்டில்களில் நடக்கும் சண்டைகள்கூட சிங்களத்தில்தான் இருக்கவேண்டும் போலும். மாவட்ட சபைகள் வந்துவிட்டால் இவர்களுடைய இலட்சியம் நிறைவேறாதென்று அஞ்சுகிறார்கள். நல்ல பண்பாடுள்ள சிங்களவர்கள்கூட இலங்கையில் வாழும் தமிழர் சோனகர் மலாயர் எல்லோரும் ஒரு தனிச்சிங்களக் குடைக்குள் வரவேண்டும் என்று கூட்டங்களில் பேசுவதை நான் கேட்டிருக்கிறேன்.

ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பிருந்த மொகஞ்சதாரோ நாகரீகத்துடன் தொடர்புள்ள ஒரு பெரிய திராவிட சமுதாயம் இதற்கு ஒப்புக்கொள்ளுமா என்று பகுத்தறிவுள்ளவர்கள் கேட்கவேண்டும்.

மாவட்ட சபை விடயத்தோடு நான் மிகவும் நெருங்கிப் பழகியபடியினால் இதனை எழுதுகின்றேன். சாதாரண கிராம வாசிகள் நூற்றாண்டுக்காலமாக வெவ்வேறு சாதி சமயத்தவருடன் அமைதியாக வாழ்க்கை நடாத்திவருகிறார்கள். குழப்பம் செய்யவிரும்பும் அரசியல் வாதிகளும், சுயநலமிகளுமே துவேஷத்தைக் கிளப்பி நாட்டின் அமைதியைக் குலைக்க முனைகின்றார்கள்.


## பாராட்டுவிழா அழைப்பு

**வண்ணை வைத்தீஸ்வரவித்தியாலய பழையமாணவர் சங்கம்**

மேற்படி சங்க ஆதரவில் நீண்டகாலமாக அதிபராக இருந்த திரு. ச. அம்பிகைபாகன், உபஅதிபராக இருந்த திரு.கா.வைரமுத்து, துணை ஆசிரியராகவிருந்த திரு.து. சீனிவாசகம் ஆகிய மூவர்க்கும் அவர்களது சேவையைப் பாராட்டுமுகமாக 9.6.68 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 5 மணியளவில் கல்லூரியில் சேவைநலம் பாராட்டுவிழா நடைபெறும்.

பழைய மாணவர்கள் எல்லோரும் இந்த விழாவிற்கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

819

## இன்று முதல்

| | | |
|---|---|---|
| கிங்ஸ்லி | பிளாசா | லைலன் |
| வெலிங்டன் [யாழ்ப்பாணம்] | விஜயா [மட்டக்களப்பு] | ராஜ் [நீர்கொழும்பு] |
| ஸ்ரீகிருஷ்ணா [திருமலை] | விஜிதா [அட்டன்] | அயன் [மன்னார்] |

★ ஜெமினி கணேசன்

★ கே. ஆர். விஜயா

நாகேஷ், அசோகன், ராஜ்குமார், புஷ்பலதா, வி. கே. ராமசாமி, நாகையா

நடித்த

ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ்

# 'ராமு'

அன்னை, குழந்தையும் தெய்வமும், மேஜர் சந்திரகாந்த் ஆகியவற்றை அளித்த ஏ.வி.எம். புரொடக்ஷன்ஸ் அளிக்கும் ஜனாதிபதி பரிசு பெற்ற மற்றோர் உன்னத திரைவிருந்து. சென்னையில் நூறு நாட்களுக்குமேல் ஓடிய படம்.

இசை: எம்.எஸ்.விஸ்வநாதன்
டைரக்ஷன்: திருலோகசந்தர்

## வின்சர்

ஜெமினி கணேசன் சாவித்திரி முத்துராமன் கே. ஆர். விஜயா நாகேஷ் நடித்த

# சீதா

ஜெமினி கணேசனின் 100வது படம்.
சாவித்திரியின் 150வது படம்.
திரைக்கதை, வசனம், டைரக்ஷன்: A. P. நாகராஜன்

## ராஜா

(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயாதினங்களில் 4 காட்சி
ஜெய்சங்கர்-கே.ஆர். விஜயா நடிக்கும்
**முகூர்த்த நாள்**

## ராணி

(யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர், பாரதி, சோ நடித்த
**நான் யார் தெரியுமா?**

## REGAL JAFFNA

Daily at 4-45, 7-00 & 9-45 P M.
Roger Browne in
**SUPER SEVEN CALLS CAIRO**

## MANOHARA

JAFFNA
Daily: 4-45, 7-00 & 9-45 P.M.
**SEX AND THE SINGLE GIRL**

## வரி விளம்பரம்

அண்மையில் சிவபதமடைந்த எங்கள் அருமைத் தந்தையார் திரு.வே சிவக்கொழுந்து (யாழ்ப்பாணம்) அவர்களின் அந்தியேட்டியும்,சபிண்டிகரணமும் எதிர்வரும் 9-6-68 [ஞாயிற்றுக்கிழமை] நடைபெறும் என்பதை உறவினர்கட்கும், நண்பர்கட்கும் இவ்வுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். சி. கண்ணன், இராவணை, வியாபாரிமூலை, பருத்தித்துறை. 1352

### காணவில்லை

பேனா

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் கயிலாயபிள்ளையார் கோவிலுக்கும் நாவலர் சந்திக்குமிடையில் A. பூபாலசிங்கம் என்று பெயரிடப்பட்ட 'பாக்கர் 21' பேனா 5-6-68ல் காணமற்போய் விட்டது எடுத்தவர்கள் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்தால் தகுந்தசன்மானம் வழங்கப்படும் ஏ. பூபாலசிங்கம்,183, நாவலர் ரோட், யாழ்ப்பாணம். போன்:664. 1355

### விற்பனைக்கு

வான்:

நல்லநிலைமையிலுள்ள CV மொடல் போர்ட் வான்விற்பனைக்கு இஞ்சின்வேலைசெய்யப்பட்டுள்ளது ரயர்களும், றேடியேற்றரும் புதிது. யாழ்ப்பாண பெரியதபால் கந்தோருக்கு அருகாமையிலுள்ள பெனண்டோ கராச்சில் பார்வையிடலாம். 1345

காணி:

12 1/2 பரப்புபனங்காணி விற்பனவுக்கு கோண்டாவில் கிழக்கில் இருக்கின்றது. விபரங்கட்குதொடர்புகொள்ளவும். விலாசம்: திருமதி தியாகராசா அன்னம்மா, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். 1335

காணி

திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் கேணியடி வாசிகசாலைக்கு எதிரேயுள்ள ஒழுங்கையில் இரண்டு வீடுகள் கட்டக்கூடிய ஆறுபரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: சோமசுந்தரம், 'கார்மனி,' அரசடி ஒழுங்கை, திருநெல்வேலி கிழக்கு. 1348

### தேவை

நெசவு ஆசிரியர்!

நெசவு ஆசிரியர் குறைந்தது 10 வருட அனுபவம் வேண்டும். இளைப்பாறிய ஆசிரியர் விரும்பத்தக்கது. இருபாலாரும் அண்மையில் வேலைகொண்டவரிடம்பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ்பத்திரத்துடன் உடனடியாகவிண்ணப்பிக்கவும். அதிபர், வேகா நெசவுதொழிற்சாலை,மல்லாகம் 1356


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மறைந்த ரொபர்ட் கென்னடிக்கு மக்கள் அஞ்சலி
# அண்ணன் கல்லறை அருகே தம்பிக்கும் சமாதி

## நாளை அமெரிக்கா முழுவதும் துக்கதினம் அனுஷ்டிப்பர்

நியூயோர்க், ஜூன் 7

காலஞ் சென்ற செனேட்டர் ரொபேட் கென்னடியின் பூதவுடல் லொஸ் அஞ்சலஸ் நகரிலிருந்து, இன்று நியூயோர்க் கொண்டுவரப்பட்டது.

சென். பற்றிக் மேற்றிராசனத் தேவாலயத்தில், கென்னடியின் பூதவுடல், ராஜாங்க மரியாதையுடன் வைக்கப்பட்டுள்ளது. தலைவர்களும், பொதுமக்களும் வரிசையாகச் சென்று, கென்னடியின் பூதவுடலுக்குத் தமது இறுதி வணக்கத்தைச் செலுத்தினர்.

கென்னடியின் பூதவுடல், ஆர்லிங்டன் தேசிய மயான த்தில் அடக்கம் செய்யப்படும். சுமார் நான்கரை வருடங்களுக்கு முன் கொலை செய்யப்பட்ட அவரது மூத்தசகோதரரான ஜோன் எவ். கென்னடியின் பூதவுடல் அடக்கம்செய்யப்பட்ட சமாதிக்கருகேயே, ரொபேட் கென்னடியின் பூதவுடலும் அடக்கம் செய்யப்படும்.

### துக்க தினம்

அடுத்த ஞாயிற்றுக் கிழமையை, ரொபேட் கென்னடியின் மறைவை யொட்டித் தேசிய துக்க தினமாக அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்ஸன் பிரகடனஞ் செய்துள்ளார்.

## குற்றத்தடுப்பு மசோதா நிறைவேற்றப்பட்டது

இதற்கிடையில், குற்றத் தடுப்பு மசோதாவொன்றை அமெரிக்க ஜனப்பிரதிநிதிகள் சபை நேற்று நிறைவேற்றியது. இம் மசோதாவின் முக்கிய நோக்கம், கைத் துப்பாக்கிகள், துப்பாக்கிகள் மற்றும் கொலைகார ஆயுதங்களைக் கட்டுப் படுத்துவதன் மூலம் கொலைக் குற்றங்களைத் தடுப்பதாகும்.

செனேட்டர் ரொபேட் கென்னடியின் கொலை சம்பந்தமான விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. கென்னடியைக் கொலை செய்த அரபு இளைஞனை ஷெரான் பிஷாரா ஷெரானுடன், கொலைச் சம்பவம் நடைபெற்ற இடத்தில் காணப்பட்ட இளம் யுவதி யொருத்தியைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

### மேயரின் குற்றச்சாட்டு

காலஞ் சென்ற செனேட்டர் ரொபேட் கென்னடிக்கு எதிராக மாணவர்களைத் தூண்டி விட்டதாக, லொஸ் அஞ்சலஸ் மேயர், கம்யூனிஸ்ட்களைக் குற்றஞ் சாட்டியுள்ளார்.

## அனுதாபச்செய்திகள் வந்து குவிகின்றன

ரொபேட் கென்னடியின் மரணத்தையொட்டி. உலகின் பல பகுதிகளிலுமிருந்து அனுதாபச் செய்திகள் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. இந்தியா, சிக்கிம், தாய்லாந்து, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து நாடுகளின் தலைவர்கள் திரு. கென்னடியின் மரணம் தமக்கு அதிர்ச்சி அளிப்பதாகவும், அவரது குடும்பத்தாருக்கும் அமெரிக்க நாட்டுக்கும் தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதாகவும் தமது செய்திகளில் தெரிவித்துள்ளனர்.

### கொஸிஜின் அனுதாபம்

சோவியத் பிரதமர் திரு. கொஸிஜின் அனுப்பியுள்ள செய்தியில், கென்னடியின் கொலை, ரஷ்ய மக்களுக்கு ஆத்திரத்தை உண்டுபண்ணியிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அயர்லாந்தில் கொடிகள் யாவும் அரைக் கம்பத்தில் பறக்கவிடப் பட்டுள்ளன.

எதியோப்பிய மன்னர் ஹெயிலி சலாஸி, கென்னடியின் மறைவுக்காகத் துக்கம் கொண்டாடுகிறார்.

## ஐ. நா. அரபுப் பிரதிநிதிகள்

இதற்கிடையில், ஐ. நா. விலுள்ள அரபுநாட்டுப் பிரதிநிதிகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாமென்ற காரணத்துக்காக அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படும் செய்திகளை ஐ. நா. வட்டாரங்கள் மறுத்துள்ளன.

கென்னடியைக் கொன்றவன் ஓர் அரபு இளைஞன் என்பதே இச்செய்திகளுக்கு அடிப்படையாகும்.

---

### ரதோற்சவம்

யாழ்ப்பாணம், சனி

கோப்பாய் வடக்கு கந்தசாமி கோவில் வருடாந்த ரதோற்சவம் நாளை நடைபெறவிருக்கின்றது. காலை விசேஷ மேளக்கச்சேரிகளும் நண்பகல் 1 மணிக்கு சுவாமி தேருக்கு ஆரோகணம் வருதலும், இரவு இன்னிசை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## விமான கட்டணம் சிறுமாற்றம்

கொழும்பு, வியா.

இலங்கை விமான சேவைக் கட்டணத்தில் இம்மாதம் 15-ம் திகதி தொடக்கம் ஜூலை மாதம் 31-ம் திகதி வரை சிறுமாற்றம் ஏற்பட்டுள்ளது.

சுற்றுலாவுக்கான கட்டணம் சாதாரண கட்டணத்திலும் பார்க்க 24 சதவீதம் குறைக்கப்பட்டிருக்கிறது. கொழும்பிலிருந்து கல்லோயா சென்று திரும்ப 76 ரூபாவாக இருந்த கட்டணம் குறிப்பிட்ட இத்திகதிகளுக்குள் சுற்றுலா செல்வோருக்கு 57 [illegible] குறைக்கப் பட்டி[illegible] தெரிகிறது.

## ஈரானில்சோவியத் தூதுக்குழு

டெஹ்ரான், ஜூன் 7

சோவியத் பொருளாதாரத் தூதுக்குழுவொன்று ஈரானுக்கு விஜயஞ்செய்துள்ளது. பொருளாதார, தொழில் நுட்ப ஒத்துழைப்பு வளர்ச்சி குறித்து இக்குழு ஆராயும்.

---

## சாம்ராஜ்ய சங்க நூற்றாண்டுவிழா

லண்டன், ஜூன் 7

ரோயல் சாம்ராஜ்ய சங்கத்தின் நூறாண்டு பூர்த்திவிழா சமீபத்தில் ஆரம்பமாகியுள்ளது. அச்சங்கத்தின் தலைவர் வைகவுண்ட் மோரிட் இவ் விழாவை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் எதிர்காலத்தில் சாம்ராஜ்ய கூட்டணியில் பிரிட்டன் ஒருபிரதான பாகம் வகிக்குமென தெரிவித்தார்,

இந் நூற்றாண்டு விழாவின் உச்சக் கட்டமாக இம்மாதம் 26-ந் திகதி லண்டனிலுள்ள மால்பரோ மாளிகையில் ஒரு விருந்துபசாரம் நடைபெறும். 100 ஆண்டுகளுக்கு முன்பு இந்த திகதியில்தான் அரசியல் வாதிகள் பலர் லண்டனில் கூடி பிரிட்டிஷ் காலனித்துவ நாடுகளின் நலன்களைப் பேணும் பொருட்டு சாம்ராஜ்ய சங்கத்தை நிறுவினர். இந்த விருந்து வைபவத்தில் எலிசபேத் மகாராணியாரும் எடின்பேர்க் கோமகனும் கலந்துகொள்வார்கள். பிரிட்டனிலும் ஏனைய சாம்ராஜ்ய நாடுகளிலுமுள்ள 41 கிளைச் சங்கங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் இந்த விருந்து வைபவத்தில் பங்கு பற்றுவார்கள்,

---

## மனித உரிமைகள் பற்றி லண்டனில் கருத்தரங்கு

லண்டன், ஜூன் 7

மனித உரிமைகள் பற்றிய ஐ. நா. கருத்தரங்கு ஒன்று இம்மாதம் 18-ம் திகதி லண்டனில் ஆரம்பமாகவிருக்கிறது. லண்டனிலுள்ள 'ரோயல் கார்டின்' ஹோட்டலில் இடம்பெறவிருக்கும் இந்தக் கருத்தரங்கில் 28 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள்.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அனுசரணையுடன் ஐ. நா. சபை இந்தக் கருத்தரங்கை ஒழுங்கு செய்துள்ளது பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி திரு. மைக்கேல் ஸ்டீவார்ட் இந்தக் கருத்தரங்கை ஆரம்பித்து வைப்பார், இக்கருத்தரங்கு இரண்டு வாரங்கள் வரை நடைபெறும்.

உலகெங்கிலும் மனித உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதில் தாம் பெற்றுள்ள அனுபவங்களைப் பரிமாறிக் கொள்வதற்கு உலக நாடுகளுக்கு இக்கருத்தரங்கு ஒருமேடையாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய ராஷ்டிரபதி புடாபெஸ்ட் வந்தார்

### கோலாகலமானவரவேற்பு

புடாபெஸ்ட், ஜூன் 7

இந்திய ராஷ்டிரபதி டாக்டர் சகீர் ஹுசெயின், நேற்றுத் தமது ஐந்து நாள் விஜயத்தை மேற்கொண்டு, ஹங்கேரியின் தலைநகரான புடாபெஸ்டில் வந்திறங்கினார். பின்னர், அவர் ஹங்கேரி ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசினார்.

புடாபெஸ்டில் ராஷ்டிரபதி ஹுசெயின் வந்திறங்கியபோது, அவருக்குக் கோலாகலமான வரவேற்பு அளிக்கப்பட்டது. அவரை வரவேற்க, ஹங்கேரி ஜனாதிபதியும், மற்றும் தலைவர்களும் விமானநிலையத்துக்கு வந்திருந்தனர்.

இந்திய ராஷ்டிரபதியை வரவேற்றுப் பேசுகையில், 'உலகின் பெரிய நாடுகளில் ஒன்றினது தலைசிறந்த தலைவர் டாக்டர் சகீர் ஹுசெயின், என்று ஹங்கேரி ஜனாதிபதி குறிப்பிட்டார்.

உலக சமாதானத்துக்குப் பாடுபடும் நாடுகளில் ஹங்கேரியும் ஒன்றென்றும், கிழக்குக்கும் மேற்குக்குமிடையே அது ஒரு பாலமாக உள்ளதாகவும் இந்திய ராஷ்டிரபதி, தமது பதிலுரையில் கூறினார்.

---

## அணு ஆயுத பரவல் தடை நகல் ஒப்பந்த வாக்கெடுப்பு

### ஐ. நா. பிரதான அரசியல் கமிட்டி ஒத்தி வைத்தது

நியூயோர்க், ஜூன் 7

சோவியத்-அமெரிக்க இணைப்புத் தயாரிப்பான அணு ஆயுத பரவல் தடை நகல் ஒப்பந்தத்தின்மீதான வாக்கெடுப்பை, ஐ. நா. பிரதான அரசியல் கமிட்டி மூன்று நாட்களுக்கு ஒத்திப் போட்டுள்ளது.

ஆசிய-ஆபிரிக்க நாட்டுப் பிரதிநிதிகளின் வேண்டுகோளுக்கிணங்கவே, வாக்கெடுப்பு இவ்வாறு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இவர்கள், தமது அரசாங்கங்களிடமிருந்து வாக்களிப்பது சம்பந்தமாக ஆலோசனை பெறுவதற்காகவே வாக்கெடுப்பு ஒத்திவைப்புக்காகக் கோரியிருந்தனர்.

---

## தூர கிழக்கு நாடுகளின் இராணுவ பாதுகாப்புமாநாடு

### அடுத்த வாரம் கோலாலம்பூரில் ஆரம்பம்

லண்டன், ஜூன்-7

தூரகிழக்கு நாடுகளின் இராணுவ பாதுகாப்புச் சம்பந்தமாக ஐந்து நாடுகள் மாநாடு ஒன்று அடுத்தவார ஆரம்பத்தில் கோலாலம்பூரில் ஆரம்பமாக இருக்கிறது.

ஜூன் மாதம் 10-ந் திகதி நடைபெறவிருக்கும் இந்த மாநாட்டில் பிரிட்டன் சார்பில் பிரிட்டிஷ் பாதுகாப்பு மந்திரி திரு டென்னிஸ் ஹீலி சாம்ராஜ்ய மந்திரி திரு. ஜோர்ச் தொம்சன் ஆகியோர் கலந்து கொள்ளார்கள், பிரிட்டன், மலேஷியா சிங்கப்பூர் ஆஸ்திரேலியா நியூஸிலாந்து ஆகிய நாடுகள் இந்த மாநாட்டில் பங்கு பற்றுகின்றன. தூரகிழக்கிலிருந்து தனது இராணுவ தளங்களை அப்புறப்படுத்துவதென பிரிட்டன் தீர்மானித்ததையடுத்து தூரகிழக்கின் பாதுகாப்புபற்றி இந்த மாநாட்டில் விவாதிக்கப்படும். 1971-ம் ஆண்டிலிருந்து பிரிட்டிஷ் துருப்புகள் வாபஸாவதிலிருந்து இப்பிராந்தியத்தில் எத்தகைய இராணுவபாதுகாப்பு ஒழுங்குகளைச் செய்வதென இந்த மாநாட்டில் ஆலோசிக்கப்படும்.

தூரகிழக்குப் பிராந்தியத்தில் ஆகாய பாதுகாப்பு அமைப்பு ஒன்றை உருவாக்குவதில் பிரிட்டன் அக்கறை காட்டி வருகிறது, விமான பாதுகாப்பு அமைப்பை நிறுவுவதற்குப் பிரிட்டன் ராணுவ தொழில்நுட பொருளாதார உதவிகளை அளிக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

---

### யாழ். மாநகரசபை அப்பீல்

யாழ்ப்பாணம், சனி

கடமையில் இருந்த சமயம் காயமுற்று மரணமான யாழ்ப்பாண மாநகர சபையைச் சேர்ந்த செபஸ்தி இராசப்பு என்பவரின் மனைவிக்கு நஷ்ட ஈடு வழங்கும்படி நீதிமன்றத்தில் விதிக்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து யாழ். மாநகரசபையினர் உயர்நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்துள்ளனரெனத் தெரிகிறது.

தனது கணவரின் மரணத்திற்கு நஷ் ஈடு கோரி திருமதி செபஸ்தி இராசப்பு வழக்குத் தாக்கல் செய்த சமயம் ரூபா 3500 நஷ்டஈடாக வழங்கும்படி தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. இத் தீர்ப்பை எதிர்த்தே மாநகரசபையினர் அப்பீல் செய்துள்ளதாகத் தெரிகிறது. [ந. நி.]

---

### நன்கொடை

சுழிபுரம், வெள்ளி

அகில இலங்கை இந்து சமய ஆலோசனைச் சபையினர் பாடசாலைக்குபுறம்பான சமய வகுப்புகள் நடாத்தும் ஸ்தாபனங்களுக்கு அரசாங்க நன்கொடைப் பணம் வழங்க ஆகவேண்டிய ஆயத்தங்கள் செய்துவருகின்றனர்.

### மணிவாக்கு

இறைவனை நினைந்து கொண்டே எந்த வேலையைச் செய்தாலும் சிரமம் தோன்றாது. வேலை செய்வதே ஒரு விளையாட்டுப் போல் இருக்கும் 'தான்' என்ற அகம்பாவம் இராது. வாழ்க்கையே இன்பமாகும்.

-சுவாமி ராமதாஸ்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone 389

சௌமிய ... கீலக வருஷம் வைகாசி மாதம் 26-ந் திகதி (8-6-68)

# மனிதரிடையே வேற்றுமை காட்டாதீர்

## நபிகள் நாயகம் காட்டிய சமதர்மம்

நாகரிகம் என்ற பெயரால் அநாகரிகமும் காட்டுமிராண்டித்தனமும் தலைவிரித்தாடுவதை இன்று நாம் கண்கூடாகக் காண்கிறோம். அறிவிலும் ஆராய்ச்சியிலும் மேம்பட்டு வாழும் மனிதன், மனிதனுடைய சருமத்தின் நிறத்திலும் வேற்றுமை பாராட்டுகின்றான். நிறப் பாகுபாட்டு முறையை நபிகள் [ஸல்] அவர்கள் அடியோடு வெறுத்தார்கள்.

ஒரு முறை அபிசீனிய நாட்டு நீக்ரோவான பிலால் [ரலி] அவர்களுக்கும் அபூதர் [ரலி] என்பவருக்கும் வாக்குவாதம் மூண்டு விட்டது. இதன் காரணத்தினால் அபூதர், பிலாலை நோக்கி "ஏ! கறுப்பியின் மகனே!" என்று சொல்லிவிட்டார். இதனை அவதானித்த நாயகம், உடனே அபூதரை நோக்கி, "அபூதரே, கறுப்பியின் மகன், வெள்ளைக்காரியின் மகனைவிட எந்தவிதத்திலும் குறைந்தவனல்லன். அல்லாஹ்விடம் எவர் கூடிய பய பக்தி கொண்டவரோ அவர்தான் உயர்ந்தவர்" என்று சொன்னார்கள். உடனே அபூதர், தன் முகத்தினை பிலால் [ரலி] யின் பாதங்களிலே வைத்து மன்னிப்புக் கோரினார்கள்; கண்ணீர் சொரிந்தார்கள். இது சரித்திரச் சான்று. இவ்வுண்மை 'என்சைக்கிளோபீடியா பிரிட்டானிகா'வில் "தீர்க்கதரிசிகளுக்குள் எல்லாம் தலைசிறந்த வெற்றிபெற்றவன் முஹம்மது [ஸல்]" என்ற வாசகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

"திராட்சை வற்றல் போன்ற சுருண்ட தலையையுடைய ஒரு நீக்ரோதானும் உனது நாட்டை நீதியாக அரசாட்சி செய்தால், அவனுக்குக் கீழ்ப்படிந்து நடந்து கொள்" என்று மற்றோரிடத்தில் நபிமணி குறிப்பிட்டிருப்பது ஈண்டு நோக்கற்பாலது. ஆட்சித் தலைவன் கறுப்பனாயிருந்தாலும் அவனைப் பின்பற்றி நட என்கிறது நபிமொழி. ஆகவே தான் அல்லாமா இக்பால், நாயகத்தை வாயாரா வாழ்த்துகிறார். முஸ்லிம்களை நோக்கி அறைகூவுகிறார்.

"அவர்கண் முன்னே
உயர்ந்தவர், தாழ்ந்தவர்
இருவரும் ஒன்றுதான்.

அவர், அடிமை என்று
கூறப்படுபவனுடன்
அமர்ந்து ஓரே விரிப்பில்
உணவுண்டார்"

என்று ஓர் இடத்திலும்,

"அவர் இனவேறுபாடு
களைக் கொளுத்தித்
தூய்மைப்படுத்தினார்.

அவரின் நெருப்பு குப்பை
குவியல்களை
எரித்துச்சாம்பராக்கியது.

காம்புகள் பலவாயினும்
மணம் ஒன்றாக இருக்கும்,
ரோஜா மலர் போல்
வோம் நாம்.

இந்த சமூகத்தின் ஆன்மா
அவர,
அவரும் ஒருவரே"

என்று மற்றோரிடத்திலும் கவிஞர் இக்பால பாடுகிறார்.

நபிமணி [ஸல்] அவர்கள் அகில உலக முஸ்லிம்களின் சிந்தனைக்காக, அதாவது உலகம் உருக்குலைந்து அழிந்தொழியும் காலம்வரை ஓர் உன்னதமான - உத்தமமான இறுதிப் பிரசங்கம் செய்தார்கள். ஆனாலும் எமக்கு அதில் அளவற்ற அன்பு இல்லை; அக்கறை இல்லை அவர் கூறிய சமதர்மம் எமது குருட்டுக் கண்ணுக்குப் புலப்படுகிறதில்லை.

"விசுவாசிகள் யாவரும் சகோதரர்கள். உங்களுடைய சகோதரர்களின் எப்பொருளையும் அவர் மனம் இசைந்து கொடுக்காத வரையில் அதனை நீங்கள் உபயோகிப்பது தவறாகும்" இது நாயகத்தின் இறுதி வேண்டுகோளின் ஓர் அம்சம்.

"நிச்சயமாக உங்களில் சிரேஷ்டமானவர் அல்லாஹ்விடம் மிகுந்த பக்தி உடையவர. அரேபியர் அரேபியர் இல்லாதவரை விடச் சிறந்தவரல்லர். அரேபியர் அல்லாதவர், அரேபியரைவிடச் சிறந்தவரல்லர். முஸ்லிம்கள் யாவரும் சகோதரர்களே!" இதுவும் இறுதிப்பிரசங்கத்தின் ஓர் முக்கிய அம்சமாகும் என நாயகம் (ஸல்) அரேபியர்களுக்கும் அரேபியர் அல்லாதோருக்கும் இடையேயுள்ள சமதர்மத்தன் சிகரமாக விளங்கி...

ஏ. ஸி. நஜுமுத்தீன்.

---

## வகுப்புவாதம் என்றால் என்ன?

"ஈயத்தைப் பார்த்து இளிச்சதாம் பித்தளை" என்று ஒரு பழமொழி உண்டு. தமிழரசுக்கட்சி வகுப்புவாதக் கட்சியானையால் அதைத் தடைசெய்யவேண்டும் என்று திரு. டி. பி. இலங்கரத்தின கூறியிருப்பதைப் பார்த்ததும் இந்தப் பழமொழிதான் நினைவுக்கு வருகிறது.

மக்கள் பிரதிநிதிகள் சபையில்திரு. இலங்கரத்தினவோ, வேறு எந்தப் பிரதிநிதியோ எதையும் சொல்லலாம். அது அவர்களுக்குள்ள உரிமை. வகுப்புவாதம் இந்த நாட்டில் அடிக்கடி தலைவிரித்தாடுகிறது. நாட்டுக்குப் பெருந் தீங்கான வகுப்புவாதத்தைக் குழிதோண்டிப் புதைக்கவேண்டும் என்பதுதான் நமது விருப்பம்; இந்த நாட்டின் அமைதியிலும் முன்னேற்றத்திலும் அக்கறையுடைய எவரும் வகுப்புவாதத்தை ஒழித்துக் கட்டவேண்டும் என்றே விருப்பம் கொண்டுள்ளனர்.

வகுப்புவாதம் என்றால் என்ன? தேசிய ஐக்கியம் என்றால் என்ன? இவற்றுக்குச் சரியான விளக்கம் கிடைக்கவேண்டும். இந்த நாட்டுக்கு கிடைத்த சுதந்திரத்தை, இந்த நாட்டைத் தாயகமாகக் கொண்ட சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் ஆகிய அனைவரும் அனுபவிப்பதற்கு உரிமையுடையவர்கள். இவர்களில் ஒரு சமூகத்தினருக்கு இருந்துவந்த உரிமைகள் மறுக்கப்பட்டால், அவர்கள் "ஏன் எங்கள் உரிமையைப் பறிக்கிறீர்கள்?" என்று கேட்டால் அது வகுப்புவாதமா? "எங்கள் மொழியில் எங்கள் அலுவல்களைச் செய்யத் தடைசெய்யாதீர்கள்" என்று கேட்பது வகுப்புவாதமா?

"இந்த நாடு எங்களுக்குத்தான் சொந்தம்; உங்களுக்கு எந்தவித உரிமையுமில்லை" என்று பெரும்பான்மைச் சமூகத்தினர் கூறினால் அது வகுப்புவாதமில்லையா? "எங்கள் மொழியைத்தான் நீங்கள் பேசவேண்டும், எங்களைப்போலவே நீங்கள் உங்கள் பழக்க வழக்கங்களை எல்லாம் மாற்றிக்கொள்ளவேண்டும், எங்களுடன் நீங்கள் இரண்டறக் கலந்துவிட வேண்டும்" என்று கூறுவதுதான் தேசிய ஐக்கியமா?

இந்த நாட்டில் வகுப்புவாதக் கூச்சல் எப்பொழுது தோன்றியது; எப்படித் தோன்றியது? வகுப்புவாதம் இந்த நாட்டுக்கு இழைத்துள்ள தீமைகள் என்ன? வகுப்புவாதத்தை வளர்த்து வரும் அரசியல் கட்சிகளும், இதர ஸ்தாபனங்களும் எவை? வகுப்புவாதத்தை இங்கு பரப்பி வரும் அரசியல்வாதிகள் யார்? வகுப்புவாதத்தைப் பரப்புவதில் பத்திரிகைகள் வகிக்கும் பங்கென்ன?

இவற்றுக்கெல்லாம் சரியான பதில் காணவேண்டும். தமிழரசுக்கட்சிதான் வகுப்புவாதக்கட்சி என்றும் அதைத் தடைசெய்யவேண்டுமென்றும் கோரியதற்குப் பதிலாக வகுப்புவாத ஸ்தாபனங்களையும், பத்திரிகைகளையும் தடைசெய்யவேண்டுமென திரு. இலங்கரத்தின கோரியிருந்தால் அவரது நல்லெண்ணத்தையும் தேசாபிமானத்தையும் புரிந்துகொள்ளக் கூடியதாக இருந்திருக்கும்.

என்றாலும் இந்நாட்டில் வகுப்புவாதத்தைக் குழிதோண்டிப் புதைப்பதற்காக வகுப்புவாத ஸ்தாபனங்கள், வகுப்புத் துவேஷத்தைப் பரப்புவோர் பற்றி வெளிநாட்டு அறிஞர் சிலரைக் கொண்ட கமிஷன் நியமித்து ஆராய்ந்தால் பயன் கிடைக்காமற் போகாது.

---

### திருமொழிகள்

மனிதர்கள் பால் கருணை கூராதவன் மீது அல்லாஹ்வும் கருணை கூர்வது கிடையாது. —புகா, மிஷ்

ஃ ஃ ஃ

முஸ்லிம்களுடைய வீடுகளில் நல்லது, நன்றாக நடத்தப்படுகின்ற ஓர் அநாதைக் குழந்தையுள்ள வீடாகும், முஸ்லிம்களுடைய வீடுகளில் தீயது துன்புறுத்தப்படுகின்ற ஓர் அநாதைக் குழந்தையுள்ள வீடாகும்.

—இப்னுமாஜா.

ஃ ஃ ஃ

சிறியோர்மீது கிருபை இல்லாதவனும், பெரியோரைக் கண்ணியப்படுத்தாதவனும், நன்மை புரியும்படி ஏவித் தீமை விட்டு விலக்காதவனும் நம்மைச் சேர்ந்தவனல்லன்.

ஃ ஃ ஃ

மூன்று விஷயங்களில் காலதாமதம் கூடாது. தொழுகை வேளை சமீபித்து விட்டபோதும்; இறந்தவனின் சடலத்தை அடக்கம் செய்ய வேண்டிய நேரம் நெருங்கி விட்டபோதும்; மணமகன் கிடைத்து விட்ட போதும் காலதாமதம் கூடாது —[ரஹ்]

ஃ ஃ ஃ

நீங்கள் ஒரு பிரேதப் பெட்டியைக் கண்டால் எழுந்து நிற்கக் கடவீர்

—புகா

ஃ ஃ

உங்களில் எவனுமே, அவனுக்கு, அன்னவனுடைய பெற்றோரையும், தனயனையும், இன்னும் எல்லா மானிட கோடிகளைப் பார்க்கினும் நான் அதிக உவப்பானவனாக ஆகும் வரையில் ... பெற்றோர் ஆக மாட்டான். —புகா

---

# வழிகாட்டும் வான்மறை

எனக்கு வழிபட்டு (என்னை வணங்குவதற்கன்றி ஜின்களையும் மனிதர்களையும் நான் படைக்கவில்லை. '[5-1-56] எனக்கூறும் திருமறை', உங்களில் நற் கருமங்களைச் செய்வோர் யார் என்று உங்களைப் பரிசோதிக்கும் பொருட்டு [உங்களையும் இவற்றையும்] சிருஷ்டித்தேன் அவன் சிருஷ்டித்தான் [11-7] என்றும் உங்களில் எவர் செயல்களில் மிக்க அழகானவர் என்பதில் உங்களைச்சோதிக்கும் பொருட்டே அவன் வாழ்வையும் மரணத்தையும் படைத்திருக்கிறான். அவன் [யாவரையும்] மிகைத்தோன் மிக்க மன்னிப்புடையோன்' [67-2] என்றும் மானிடப் படைப்பின் நோக்கம்பற்றி எடுத்தியம்புகிறது திருக்குர்ஆன்.

இறைவனை வணங்கி நற்செயலாளராய் மானிடர் வாழவேண்டுமென்று கூறும் அல்குர்ஆன் அதற்குரியநேர்வழி இனது என்பதைக் கூறாமல் விட்டுவிடவுமில்லை. எழுபத்தாறும் அத்தியாயத்தின் மூன்றாம் திருவசனம் இதனை அத்தாட்சிப்படுத்துகிறது 'பின்னர் நிச்சயமாக அவனுக்கு நேரான வழியையும் அறிவித்தோம். எனினும், (அதனைப் பின்பற்றி நமக்கு) நன்றிசெலுத்துவோருமிருக்கின்றனர். (சாதனை) நிராகரித்துவிடுவோருமிருக்கின்றனர்.

சிறந்தபடைப்பாகபடைக்கப்பட்ட மனிதன் தனது அறிவின்மையால் இறைவனையும் அவன் காட்டிய நேர்வழியையும், நிராகரித்து தன்னிச்சையாக வாழ்க்கை நடாத்துவதால் ஏற்படக் கூடிய பயன் என்னவென்பதை 95-ம் அத்தியாயத்தின் 5ம் வசனம் சுட்டிக் காட்டுகிறது. (அவனுடைய துர்நடத்தையால்) பின்னர் அவனைத்தாழ்ந்தோரினிலும் தாழ்ந்தோனாக நாம் ஆக்கிவிடுகிறோம்'.

### பக்திமானே கண்ணியமானவன்

மனிதனுக்கு எழுத்தறிவைக் கற்றுக்கொடுத்தவன் இறைவனே (96-4) பேசுங் கலையைக் கற்றுக்கொடுத்தவனும் அல்லாஹ்வே [54-43] எனக்கூறும் குர்ஆன், பக்தியே மனிதனைக் கண்ணியப்படுத்தும் என்பதனைவற்புறுத்துகிறது. 'மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண் ஒரு பெண்ணிலிருந்துதான் படைத்தோம். பின்னர் ஒருவர் மற்றவரை அறிந்துகொள்ளும் பொருட்டு உங்களைக் கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். உங்களில் எவன் மிக பக்தியுடையவனாக இருக்கிறானோ அவன் தான் அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக மிக்க கண்ணியவான்-(49-73).


உலகில் மனிதன் சுபீட்சமாக வாழ்வதற்காக அவனுக்கு இறைவன் அளித்துள்ள அருட்கொடைகள் பற்றி அவனே வானத்திலிருந்து மழை பொழியச் செய்து அதைக் கொண்டு உங்களுக்கு ஆகாரமாகப் பற்பல கனிவர்க்கங்களையும் வெளிப்படுத்துகின்றான். நீங்கள் யாத்திரை செய்யும்பொருட்டு கப்பலை உங்களுக்கு வசப்படுத்திக் கொடுத்து தன்கட்டளைப்படி சமுத்திரத்தில் செல்ல வைக்கிறான். ஆறுகளையும் [கால்வாய்களையும்] உங்கள் விருப்பப்படி பாய வசதியளித்தான். சூரியனையும் சந்திரனையும் உங்களுக்கு பயன் அளிக்கக் கூடிய வகையில் அமைத்தான்.

மாறி மாறி வரும் இரவையும் பகலையும் உங்களுக்காக அமைத்து பயனடையவைச் செய்தான். [14—32] கால்நடைகளையும் உங்களுக்காக அவனே படைத்திருக்கிறான். அவற்றில் குளிரைத் தடுக்கும் பொருளையும் பல பிரயோசனங்களும் உள்ளன

அவற்றில் சிலவற்றை புசிக்கின்றீர்கள். குதிரைகள், கோவேறு கழுதைகள் முதலியவற்றை நீங்கள் ஏறிச் செல்வதற்காகவும் அலங்காரமாகவும் இன்னும் நீங்கள் அறியாதவற்றையும்படைக்கிறான்.(16 — 52)

---

வட இலங்கையில்
நாதாரம் பெற்ற
கண் பரிசோதகர்
அனஸ்கோ,
12 மெயின் வீதி, யாழ்ப்பாணம்
[நூதனசாலைக்கு முன்பாக]




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...தீர்

...ஒருல் நமது முஸ் ...வர்கள், கோதிர தெருக்களிலும் ...கள் பேசி ஒரு ... ஒருவர் உயர்ந் ...ன்று தம்பட்டம் ...கொண்டு திரிவது. ...ஞரின் போதனை ...சிப்பதற்கும், இழி ...வதற்கும் சமனு ...பதை உணர்வார்

வீடுகளிலே பணி ...க என்றுசொல்லி ...குழந்தைகளைப் ...நயப்புடைத்து நய ...புரிவது இன்று ...தாரணமாகி விட் ...வர்களுக்கு சுதந்தி ...ல. வீடுதலை இல்லை. ...க்கு உணவு சாய் ...னும், பழைய கஞ் ...ப்படியான துர்நிர் ...நக்கெல்லாம் இஸ் ...ந்து கொடுக்கும் ...என்று வாரும் ...டவேண்டாம். ...ளுக்கு அடிமைகளி ...அவர்களை நல்ல ...பராமரியுங்கள். ...உண்பதையே அவ ...கொடுங்கள். ...உடுத்துவதையே ...க்கும் அணியுங் ...ர்கள் குற்றம் ...மன்னித்துவிடுங் ...லது விடுதலை ...டுங்கள். ஏனென் ...ங்களைப்போலவே ...அல்லாவின் ...ள். 'அவர்களைக் ...ற்குள்ளாக்கி விடா ...என்று இறுதி ...ாளில் நாயகம் கூறியுள்ளார்

# "மாணவர்கள் கல்வித் தரம் உயரவழி என்ன?"

உடுப்பிட்டி, வெள்ளி

"பாடசாலையினதும், மாணவர்களினதும் முன்னேற்றத்திற்கு முதலாவதாக ஆசிரியர்களும், இரண்டாவதாகப் பெற்றோர்களும், மாணவர்களும் உதவி புரிந்தால்தான் பாடசாலை மாணவர்களின் தரம் உயரும்." என்று கரணவாய் தெற்கு மணியகாரன் தோட்டம் சைவப் பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சங்க வருடாந்தக் கூட்டத்தில் ஆசிரியர் திரு. எஸ். தாமோதரம்பிள்ளை கூறினார்.

கூட்டத்திற்குத் தலைமை வகித்த தலைமையாசிரியர் திரு. வே. இளையதம்பி பாடசாலையின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பணியில் பெற்றோரின் பங்கு பற்றி விளக்கிப் பேசினார். செயலாளர் ஆசிரியர் திரு. ச. செல்வநாயகம் பேசுகையில் கூறியதாவது:-

"பாடசாலைகளினதும், மாணவர்களினதும் முன்னேற்றத்திற்கு ஆசிரியர்கள் அவ்வளவு முக்கியமானவர்கள் அல்ல. அப்படிக் கருதுவதும் தவறாகும். இன்று இப் பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர்கள் நாளை வேறு பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்படலாம். மாணவரின் தரமும், பாடசாலையின் முன்னேற்றமும் நிலையாக நிற்க வேண்டுமானால் முக்கியமாகப் பெற்றோரும், மாணவர்களுமே காரணம். ஆசிரியர்களை நல்ல முறையில் பயன்படுத்துவது பெற்றோரும் மாணவருந்தான்."

வேறு பலரும் பேசினர்.

## சம்மேளன கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

அகில இலங்கை ஐக்கிய தொழிற்சங்க சம்மேளனத்தினதும், இலங்கை தேசிய அரசாங்க சேவையாளர் தொழிற் சங்க சம்மேளனத்தினதும், வருடாந்த கூட்டமும், கூட்டு சம்மேளன பொதுக் கூட்டமும்சம்மேளனத் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் யாழ்ப்பாணத்தில் 10ம் திகதி மாலை நடைபெறவிருக்கிறது. (ந.நி)

## ஆட்சேப கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

குருநகர் றெக்லமேசன் வீட்டுத் திட்டத்தில் உள்ள வீட்டு வாடகை உயர்வை ஆட்சேபித்து கண்டனக் கூட்டமொன்று றெக்லமேசன் சனசமூகநிலைய முன்றலில் இம்மாதம் 10ந்திகதி நடைபெறும்

டாக்டர் ஏபிரகாம் கனியூட் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி.ஜி. பொன்னம்பலம், உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் ஆகியோரும் முன்னாள் மாநகரசபை உறுப்பினர்களும் சொற்பொழிவாற்றுவார்கள். (ந.நி)

## காங்கிரஸ் வாலிப முன்னணி கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

'இளந்தமிழர்படை' நிறுவுவதற்காக. தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணி பொதுச்சபை இம்மாதம் 10ம் திகதி காலை யாழ்ப்பாணத்தில் கூடுகிறது.

திரு. மி. சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் இளந்தமிழர் படையின் சேவைகள் பற்றி விளக்கிக் கூறப்படும். முதலாவது படை யாழ்ப்பாண தொகுதியில் நிறுவப்படுமெனத் தெரிய வருகிறது. ந.நி

# நாட்டிலும் நகரிலும்

யாழ்ப்பாணத்திலுள்ள அரசாங்க விற்பனவு பகுதியில் கடைக்கு மரக்கறி வாங்கப் போயிருந்தபோது ஓர் அதிசயமான காட்சி தென்பட்டது. அங்கே ஒரு மேசை மீது புத்தம் புதிய மண் சட்டிகளில் இரண்டு மூன்று பசுத்தயிர் இருந்தது. இது எங்கிருந்து வந்தது, எப்படி கிடைத்தது, என்ன விலை என்றெல்லாம்விசாரித்தேன்.

'பசுத்தயிர் தானு என்று என்ன உத்தரவாதம்?' என்று கேட்டதற்கு 'சாப்பிட்டுப்பார்த்தால் தெரியும்' என்று சுருக்கமாக பதில்கிடைத்தது, சரிஎன்று ஒரு சட்டியை வாங்கினேன். விலை ஆக இரண்டரை ரூபாய்தான்.

மன்னம்பிட்டி, மட்டக்களப்பு, இன்னும் சிங்கள நாடுகளில் தயாரிக்கப்படும் எருமைத் தயிர் மூன்று மூன்றரை ரூபாய் விற்கும் போது இது மிகவும் மலிவானதென்றே எனக்குப் பட்டது.

எருமைத் தயிர் சட்டிக்குள் இறுகிக் கட்டியாகி வெண்ணெய்போல் கத்தியால் துண்டுதுண்டாக வெட்டக் கூடியது, பசுமாட்டுத் தயிர் அப்படியன்று. எருமைத் தயிரில் சாடையான புளிப்பு தட்டும். பசுத் தயிரில் அது இராது.

'பசுத்தயிர் உங்களுக்கு எப்படி கிடைத்தது, பொலன்னறுவை அரசாங்கப் பண்ணையிலிருந்தா?' என்று கேட்டேன்.

'இல்லை, இது இங்கே யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு சிறு பண்ணையிலிருந்து வருகிறது' என்றார்கள்.

அப்பொழுது பசுத்தயிர் கொடுக்கும் அந்த சிறு பண்ணைக்காரரே அங்கு வந்து சேர்ந்தார் அன்றைய வருவை எடுத்துப்போவதற்கு. அவரிடம் பேச்சு கொடுத்தேன்.

ஒரு சட்டி தயிருக்கு ஒன்றரைப் போத்தல் பால் காய்ச்சவேண்டுமாம். பிறகு சட்டிகள் தேடவேண்டும் இப்பொழுது 20 முதல் 26 சதத்துக்கு கடைகளில் சட்டி வாங்குகிறார். பெருந்தொகையாக ஓடர் கொடுத்தால் கூலியில் ஒரு சட்டி 15 சத வீதமாக எடுக்கலாம். ஆனால் இப்பொழுது தானே ஆரம்பம்?

[8ம் பக்கம் பார்க்க)

## பிரயாணிகள் கஷ்டம்

வவுனியா, வெள்ளி

வவுனியா உபபஸ்டிப்போவால் நடாத்தப்படும் இரவு இலுப்பங்குள பஸ் சேவை நேரசூசிப்படி ஓடாமையினால் பஸ் பிரயாணிகள் மிகவும் கஷ்டப்படுவதாக இரவு இலுப்பங்குள பஸ் பிரயாணிகள் சங்கச் செயலாளர் திரு. ஆ. சரவணமுத்து போக்கு வரத்து மந்திரிக்கு அனுப்பிய மகஜரொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

திருகோணமலையில்

## திருவள்ளுவர் விழா

திருக்கோணமலை, வெள்ளி

திருக்கோணமலை அரசூசையப்பர் கல்லூரி மண்டபத்தில் இம் மாதம் 10ம் திகதி திருவள்ளுவர் விழா நடைபெறவிருக்கிறது. தோழர் இரா முருகையா தலைமையில் நடைபெறும் இவ்விழா திருக்கோணமலை தமிழர் முன்னேற்றக் கழகத்தினரால் நடாத்தப்படுகிறது.


அனைவருக்கும் எமது மீலாத் வாழ்த்துக்கள்

யாழ்ப்பாண மக்களை கவர்ந்த கண்ணாடி வியாபாரிகள்

ஜெஸிமா பிக்சர் பலேஸ்

222, 232 கே. கே. எஸ். ரேட் - யாழ்ப்பாணம்.

போன்: 7127

கிளைஸ்தாபனம்:

ஜெஸிமாஸ்

95/3, ஸ்ரான்லி ரேட் — யாழ்ப்பாணம்.



புனித நபி பிறந்த இப்புனித தினத்தன்று எங்கள் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எங்கள்

மீலாத் நல் வாழ்த்துக்கள்

ஏ. கே. எஸ். & சன்ஸ்

நகை வியாபாரிகள்

யாழ்ப்பாணம் போன்: 519


# ...ணவர்களுக்கு சிறப்பு ...ான்றுகூறுகிறார் கி.வா.ஜ

...கண்டி, வெள்ளி ...ல் கல்வியைப் படி ...ஆசிரியர்களை ...கள் வழிபடுவ ...மட்டுமல்லாமல் ...உபதேசிகளாகிய ...ன வழிபடுவது ...சிறந்தது." ...'கலைமகள் ஆகி ...கி. வா. ஜகந்நா ...தனைப் பல்லக்கி ...ந்துமாணவர் சங்க ...குன்றின்மேல் ...குமரன் கோவில் ...ஷேக தொடக்க ...கலந்து உரையா ...ல் கூறினார். ...கி. வா. ஜகந்நா ...தொடர்ந்து பேசு ..."முருகனும் சிவ ...றல்ல. சிவன் இரு ...கள் எதற்காக ...ட்கலாம். சிவமா ...ம்பொருள் பத் ...ளும், ஐந்து தலை ...வ, பெருமான் ...ம், பன்னிருகரங் ...உடையவனாக வந ...னுடைய பேராறு ...றுமுகளாகவும், ...வாய்க்கால்களாக ...தது போதுமில்லை. ...ரத்திலுள்ள பயி ...ாம் காய்ந்தன. ...ள் தழைக்க ...மேலும் ஒரு சிற்று ...ண்டு வாய்க்கால் ...பிரிந்தது. அதி ...ப்பயிர்கள் தழை...த்தன.

உயர்ந்த பெருமானை உயர்ந்த மலையுச்சியில் வைத்து வழிபாடு செய்யும் இந்துமாணவர் சங்க முயற்சி உலகம் உள்ளளவும் நிலைக்கக் கூடியது." என்றார்.

மயிலை ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர் திரு. வே. சிவசுப்பிரமணியம் பேசுகையில், முதலில் 'ஓம்' என்னும் பிரணவத்தை சொல்லத் தொடங்குகிறோம். 'முருகா" என்னும் திருப்பெயரே "ஓ" என்னும் திருப்பெயராய் அமைந்தது. அ- வ-ம் என்னும் மூன்று பிரணவ எழுத்துக்களை ம்-வ-அ என்ற வரிசையில் அமைத்து மந்திரங்களை மறைமுகமாகச் சொல்லுதல் என்கின்ற முறையில் இது அமைந்தது நாள்தோறும் இத் திருப்பெயரை ஓதுவதாலே எல்லாப் பெருவாழ்வும் சித்திக்கும், என்று கூறினார்.

'ஈழநாடு' ஆசிரியர் கே. பி. ஹரன் வரவேற்புரை நிகழ்த்துகையில், "உலகில் எங்குமில்லாத வகையில் இந்த இளம் மாணவர்களின் உள்ளங்களில் தோன்றிய எழுச்சியே இம் முருகன் ஆலயம் தோன்ற ஏதுவாகியது." என்று கூறினர்.

[ஈழ நி.]

# தந்திகளை விரைவாக அனுப்ப நவீனயந்திரம்

யாழ்ப்பாணம், சனி


யாழ்ப்பாணம் தபால்நிலையத்திலிருந்து கொழும்பிற்கு விரைவாக தந்திகளை அனுப்புவதற்கான "டேபெறேட்டர்" என்ற நவீன வசதிகொண்ட இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது. இது நேற்று முன்தினம் தொடக்கம் இயங்கிவருகின்றது

தற்போது கொழும்பு மத்திய தந்தி நிலையத்தில் மட்டும் உள்ள இவ்வியந்திரம் தந்திகளை திசையனுகவே அனுப்பும் சக்திகொண்டதாகும். ஒரு மணி நேரத்தில் சுமார் 200 தந்திகளை தானாகவே "ஓட்டோ" இயந்திரமூலம் அனுப்பும் இவ்வியந்திரம் கூடிய கெதியாக தந்திகளை கொழும்புக்கு அனுப்பக்கூடியசக்தி வாய்ந்ததாகும்.

"டேபறெட்டர்" என்ற இந்த இயந்திரம் கண்டி, காலி ஆகிய இடங்களுக்கும் தற்போது பொருத்தப்பட்டுள்ளது. இவ் இயந்திரம் பொருத்தப்பட்டதன்மூலம் கொழும்பு, யாழ்ப்பாணம் தந்திசேவையிலுள்ளகூடிய தாமதத்தை நிவிர்த்திசெய்யலாம் எனத் தந்தி இலாகா எதிர்பார்க்கின்றது.

[ஈ. நி.]


மீலாத் வாழ்த்துக்கள் உரித்தாகுக



ஏ. கே. முகமது அன் கோ,

150, கே. கே. எஸ். ரேட்.

யாழ்ப்பாணம்.

ஏஜன்ஸிஸ்

றலிபைசிக்கிள், பிறதர்

...ப் (PFAFF) தையல் மிசின்கள்



சித்த ஆயுள்வேத வைத்தியர்களின் ஆலோசனைக்கு அமையத் தயாரிக்கப்பட்ட

குளிகைகள், மாத்திரைகள், செந்தூரம் மற்றும் ஆசவம், அரிஷ்டம் தைலம், லேகியம், எண்ணெ வகைகள்

நீங்கள் எந்நேரமும் பெற்றுக் கொள்ளலாம்.

வடமாகாணத்தின் சிறந்த ஆயுள்வேத மருந்துக்கடை

க. செ. கணபதிப்பிள்ளை அண்சன்ஸ்

51, கே. கே. எஸ். ரேட்.

யாழ்ப்பாணம்.



யாழ்ப்பாணத் தொழிற்றுறைக்கு அரிய சேவை

முதலாளி - தொழிலாளி வேலை அளிக்கும் வர்த்தக நிலையம், தொழிற் ஸ்தலம், கூட்டுறவுச் சங்கம் இன்னும் அவைபோன்ற ஸ்தாபனங்களில் நேரிடும் தொழிற் பிரச்னை - தகராறுகளைப்பற்றி உங்களுக்கு ஆலோசனை கூறும் சேவை.

இப்பிரச்னைகளைத் தீர்க்க எங்கள் அனுபவம் வாய்ந்த உத்தியோகத்தர்களிடம் ஒப்படையுங்கள்.

29, 1-ம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம்

தொழிலும் இதர ஆலோசனை சேவை




றேடியோ

அம்பிளிபயர்

கிறமபோன்

இசைத்தட்டுகள்

இலக்றிக் சாமான்கள்



விற்பனையிலும் திருத்துவதிலும்

முதல்தர ஸ்தாபனம்

S. சுலைமான்கண்டு & பிரதர்

5-7 பொம்சாக் கட்டிடம்

ஸ்ரான்லி வீதி — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'சின்னக்கதிர்காமத்தை நினைவூட்டுகிறது'

## பேராதனை முருகன் கோவில் பற்றி கி. வா. ஜ

கண்டி, வெள்ளி

"பேராதனை பல்கலைக்கழக முருகன் கோவில் சின்னக் கதிர்காமத்தை நினைவூட்டுவதாக அமைந்துள்ளது" என்று தமிழ் அறிஞரும், 'கலைமகள்' ஆசிரியருமான திரு. கி. வா. ஜெகந்நாதன் பேராதனை பல்கலைக் கழக மகாகும்பாபிஷேகத்தின் போது கூறினார்.

நேற்று காலை பேராதனை பல்கலைக்கழக முருகன் கோயில் மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. பெருந்தொகையான இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ மக்கள் விழாவில் பங்குபற்றினர். பேராதனை பல்கலைக் கழக துணைவேந்தர் திரு. ஏ. ஜே. வைப்பிற்ற உட்பட பலபிரமுகர்கள், விரிவுரையாளர்கள் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நிகழ்ச்சிகளை இலங்கை வானொலி அஞ்சல் செய்தது.

கலைஞர்களுக்கு பட்டமளிப்புவிழாவும் காலை நிகழ்ச்சியின் முக்கிய நிகழ்ச்சியாக அமைந்தது. பிரம்மஸ்ரீ விஸ்வநாதக் குருக்களுக்கு 'பிரதிஷ்ட சிரோன்மணி' என்ற பட்டமளிக்கப்பட்டது. முருகன்சிலையை உருவாக்கிய சிற்பி திரு. நா. தங்கவேலுக்கு ஆலய நிர்மான கலாரத்தினம் என்ற பட்டமும், நாதஸ்வரக் கலைஞர்கள் திரு. என். கே. பத்மநாதன், திரு. எம். வி. பாலகிருஷ்ணன் ஆகியோருக்கு 'நாகசுரக் கலாநிதி' என்ற பட்டமும், தவில் வித்துவான் குமரகுருவுக்கு 'லயஞான கலாநிதி' என்ற பட்டமும் அளிக்கப்பட்டது.

இரவு நிகழ்ச்சியில் கி வா. ஜவின் சொற்பொழிவும் இடம்பெற்றது.

## தியேட்டர்வசதிகள் பற்றி பேச்சு வார்த்தை

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்திலுள்ள தியேட்டர் சொந்தக்காரர்களையும், பரிபாலகர்களையும் யாழ்ப்பாண மாநகரசபை விசேஷ ஆணையாளர் கள் கூட்டமொன்றிற்கு அழைத்துள்ளார்கள்.

தியேட்டர்களின் சுகாதார வசதி, ஆசனவசதி, மலசல கூடங்கள் கட்டுதல் ஆகியவற்றின் அவசியம் பற்றி இக் கூட்டத்தில் விசேஷ ஆணையாளர்கள் தியேட்டர் சொந்தக்காரர்களுக்கு வலியுறுத்துவார்கள்.

இக் கூட்டம் நாளை மாலை 3 மணிக்கு நடைபெறவிருக்கின்றது. மாநகரசபைச் சட்டத்துக்கிணங்க தியேட்டர்களில் புகைபிடிப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பது பற்றியும் இக் கூட்டத்தில் வற்புறுத்தப்படும். [கா. நி]

## வடபகுதி பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் இடமாற்றம்

யாழ்ப்பாணம், சனி

வடபகுதியைச் சேர்ந்த 8 பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் இம்மாத 10-ம்திகதி முதல் இடமாற்றம் செய்யப்படவுள்ளார்கள். இவர்களில் வவனியா பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டரான திரு ஹேரத் பதவிஉயர்வு பெற்று தலைமைக்காரியாலய பொலிஸ் இன்ஸ்பெக்டராக காங்கேசன்துறைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் இன்ஸ்பெக்டர் இராமநாதன் வவனியாவுக்கும் காங்கேசன்துறையில் கடமையாற்றும் இன்ஸ்பெக்டர் இராஜேஸ்வரன் யாழ்ப்பாணத்துக்கும்யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் இன்ஸ்பெக்டர் தேவசகாயம் காங்கேசன்துறைக்கும் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் திரு. செல்லையா மன்னாருக்கும், மன்னாரில் கடமையாற்றும் இன்ஸ்பெக்டர் பெரினண்டோ காங்கேசன்துறைக்கும், வல்வெட்டித்துறையில் கடமையாற்றும் இன்ஸ்பெக்டர் வியனகே வவனியாவிற்கும் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் இன்ஸ்பெக்டர் ஜெயசிங்கா வல்வெட்டித்துறைக்கும் இந்த உத்தரவின் கீழ் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள்.

இம் மாதத்தில் வடபகுதியில் கடமையாற்றும் இன்னும்சில இன்ஸ்பெக்டர்கள் இடமாற்றம் செய்யப்படலாமென தெரிகின்றது. [கா. நி]

## பிரேத பரிசோதனை நடத்த உத்தரவு

வல்வெட்டித்துறை, வெள்ளி

வதிரியைச் சேர்ந்த பொன்னையா குமாரகுலசிங்கம் என்னும் வாலிபர் மனக்கவலை காரணமாக நச்சுதிரவகம் அருந்தி தற்கொலை செய்து கொண்டாரெனத் தெரியவருகிறது.

மரண விசாரணை அதிகாரி திரு. வி. பி. இராசரத்தினம் விசாரணை செய்கையில் இறந்தவரின் உடம்பில் வெளிக்காயங்கள் இருந்தபடியால் பிரேத பரிசோதனை நடத்தும்படி உத்தரவிட்டுள்ளார்.

## கொலைக் குற்றச் சாட்டு வழக்குத் தாக்கல்

கும்பசிட்டி, வெள்ளி

சண்டிலிப்பாய் கிராமத்தில் சங்கானையைச் சேர்ந்த கே. தம்பிஐயா துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்ததையடுத்து சங்கானைப் பொலிஸார் மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் எஸ். செல்வராஜா பீ. தங்கராஜா, ஏ. தேவராஜா ஆகிய மூன்று வாலிபர்கள் மீதும் கொலைக் குற்றம்சுமத்தி வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். எதிரிகள் மூவர்மீதும் குணரத்தினம் என்பவரை கொலை செய்ய எத்தனித்தாகவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. முதலாம் இரண்டாம் எதிரிகளை பொலிசார் கைது செய்திருந்தனர். மூன்றும் எதிரி தமது வழக்கறிஞர் மூலம் நீதிமன்றத்தில் சரணடைந்தார். எதிரிகளைத் தொடர்ந்து ரிமாண்டில் இருக்க உத்தரவிட்டு வழக்கு விசாரணை இம்மாதம் 11-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. சாட்சிகளுக்கு சம்மன்ஸ் அனுப்பவும் மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

## பௌர்ணமி தின கலைவிழா

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண மாநகரசபை நடாத்தும் பௌர்ணமி தின கலைவிழா யாழ் திறந்த வெளி அரங்கில் இம்மாதம் 10ம் திகதி நடைபெறும்.

பண்டத்தரிப்பு கலைவாணி சனசமூக நிலையத்தின் 'அடியேன் சபா' யாழ். சரவணபவா நாடக மன்றத்தின் 'மணவீடு' பாஷையூர் மக்கள் முன்னேற்ற சங்க சமூகத்தினரின் 'மஞ்சோரா' ... இடம் பெறும். [ந. நி]

## தியாகி கந்தசாமி மறைவு தினம்

யாழ்ப்பாணம், சனி

மறைந்த தியாகி கந்தசாமியின் நினைவுதினம் யாழ் கச்சேரியில் அனுஷ்டிக்கப்பட்டது.

தியாகி கந்தசாமி செய்த தியாகம் தொழிலாள வர்க்கத்திற்கு ஒரு எடுத்துக் காட்டாகவும் விழிப்புணர்ச்சியளிப்பதாகவும், சகோதரத்துவத்தையும், அதன் வளர்ச்சியையும் வளர்ப்பதற்கு ஓர் கலங்கரை விளக்கமாகவும் அமைந்துள்ளது என மேற்படி வைபவத்துக்கு தலைமை வகித்துபேசிய திரு. எஸ். கணேசன் கூறினார்.

திரு. ஏ. விசுவநாதன் பேசும் போது, தொழிலாளர்களின் கண்ணீரைத் துடைக்க முன்வந்த உத்தமர் தியாகி கந்தசாமி ஆவர் என்றார். சாதாரண அன்றாட பிரச்னைக்காக தனது உயிரையே தியாகம் செய்த உத்தமரை ஞாபகப் படுத்தாமல் இருக்க முடியாது என்றார்.

திரு. கந்தசாமியின் அன்னையாருக்கு இக்கூட்டத்தில் பொற்கிழி ஒன்றும் வழங்கப்பட்டது. [ந. நி]

## வல்வெட்டித்துறை பட்டினசபைகோரிக்கை

வல்வெட்டித்துறை, வெள்ளி

வடபகுதியிலிருந்து பொருள் கட்டுப்பாட்டுச் சட்ட அமுலை உடனடியாக வாபஸ் பெறவேண்டும். அடையாள அட்டை மசோதாவை அகற்ற வேண்டும். இவை இரண்டையும் ஒழித்துக் கட்டுவதற்கு தமிழரசுக்கட்சி தமிழ் காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற அங்கத்தவர்கள் ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டும் என வல்வெட்டித்துறை பட்டினசபை தனது மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது.

பட்டினசபைத் தலைவர் திரு. வி. இரத்தினவடிவேல் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் பிரதிகள் தமிழரசுக் கட்சித் தலைவருக்கும், தமிழ் காங்கிரஸ் கட்சித் தலைவருக்கும் மற்றும் இதுசம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## இன்று பயிற்சியை ஆரம்பிப்பார்

யாழ்ப்பாணம், சனி

சர்வதேச 'ஹொக்கி' விளையாட்டு பயிற்சியாளரும், "ஒலிம்பிக் ஹொக்கி" விளையாட்டு மத்தியஸ்தருமான திரு. ஜயசிங் இன்று யாழ்ப்பாணத்தில் ஹொக்கி விளையாட்டுப் பயிற்சிகளை நடாத்துவார்.

யாழ்ப்பாணம் ஸ்டேடியம் மைதானத்தில் நடைபெறவிருக்கும் இப்பயிற்சி இன்று முதல் 14-ம் திகதி வரை நடைபெறும். [கா. நி]

## யாழ்ப்பாணத்தில் கறுப்புக்கொடி

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் மெயின் வீதியிலுள்ள கென்னடியின் பெயரைக் கொண்ட ஸ்தாபன மான்று செனட்டர் ரொபர்ட் கென்னடியின் மறைவுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக நேற்று மூடப்பட்டிருந்தது. 3 கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டு அது தன் துக்கத்தைத் தெரிவித்துக்கொண்டது. [கா. நி.]

# அவர்கள் நோக்கு

கொழும்பு, வெள்ளி

மாவட்டசபை மசோதாவை எதிர்ப்பதற்காக 23 முஸ்லிம் தாபனங்களைக்கொண்ட செயற்குழு ஒன்று இஸ்லாமிய சோஷலிஸ முன்னணி மகாநாட்டில் நிறுவப்பட்டது.

மாவட்டசபை முஸ்லிம் மக்களை எவ்வாறு பாதிக்குமென்பதை இஸ்லாமிய சோஷலிஸ முன்னணித் தலைவர் டாக்டர் அல்ஹாஜ் பதியுதீன் மூகமத் விளக்கிக் கூறினார்.

### ஐக்கியம் குலையும்

கொழும்பு, வெள்ளி

மாவட்டசபை மசோதாவினால் மீண்டும் இலங்கைச் சரித்திரத்தில் துட்டகைமுனு, எல்லாளன் சகாப்தம் உருவாகுமெனதெஹிவளை கல்கிசை கிராமசபை மாவட்ட சபைக்கு எதிராக ஒரு தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றிய போது தெரிவிக்கப்பட்டது. கிராம சபைத் தலைவரான திரு. டபிள்யூ, ஏச், எம். அமரசேகரா [யு. என். பி.] மாவட்டசபை மசோதவினால் ஐக்கியம் சீர்குலைந்து விடுமென்றார்.

### தீர்மானம் தோல்வி

அக்குரஸ்ஸ, வெள்ளி

மாவட்டசபை பற்றிய வெள்ளை அறிக்கைக்கு எதிராக கனன்கெ கிராமசபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஒரு வாக்கினால் தோல்வியடைந்தது. தீர்மானத்திற்கு ஆதரவாக 5 வாக்குகளும் எதிராக 6 வாக்குகளும் கிடைத்தன.

### கிராமசபை எதிர்ப்பு

கொழும்பு, வெள்ளி

பிரதமர்ஜனநாயகத்துக்கு மதிப்புக் கொடுப்பவராயிருந்தால் மாவட்டசபைக்கு உள்ளூராட்சிமன்றங்கள் தெரிவிக்கும் எதிர்ப்பை ஏற்றுக்கொண்டு, மசோதாவை கைவிடவேண்டும் எனக் கோரும் ஒரு தீர்மானம் வாதுவை கிராமசபையில் ஏகமனதாக நிறைவேறியது.

### பட்டினசபை எதிர்ப்பு

அக்குரஸ, வெள்ளி

அக்குரஸ பட்டினசபையின் மாதாந்தக் கூட்டம் திரு. டீ. ஏ. சூரியாராச்சி தலைமையில் நடைபெற்ற போது, மாவட்டசபை மசோதாவிற்கு எதிரான தீர்மானமொன்று ஏகமனதாக நிறைவேறியது.

### எதிர்காலம் பாழாகும்

பலாங்கொட, வெள்ளி

மாவட்டசபை மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் சிங்களப் பிள்ளைகளின் எதிர்காலம் பாழடைந்துவிடும் என்று பலாங்கொடை தொகுதியிலுள்ள ரசகல கிராமசபை மாவட்டசபை மசோதாவிற்கு எதிராக ஏகமனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றியபோது கிராமசபைத் தலைவர் திரு. கே பியதாசா கூறினார்.

### வாபஸ் பெறுக

கம்பகா, வெள்ளி

மாவட்டசபை மசோதாவை வாபஸ் பெறும்படி பிரதமரைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் உடுகம்பொல கிராமசபை கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது. கிராமசபைத் தலைவர் திரு. ஜே. ரி பெரேரா பேசும்போது, நகரசபைகள், பட்டனசபைகள், கிராமசபைகள், பௌத்த பிக்குகள், ஆசிரியர்கள் மாவட்டசபை மசோதாவிற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், பிரதமர் வெள்ளையறிக்கையைக் கொண்டுவந்திருப்பது சந்தேகத்தைக் 'கொடுப்பதாகக் கூறினார்.

### ஆபத்தாக முடியும்

கொழும்பு, வெள்ளி

மாவட்டசபை மசோதா பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டால் அதுபெரும் ஆபத்தாக முடியுமென்று ஹொரவல்லை கிராமசபை மாவட்டசபை மசோதாவிற்கு எதிராக - நிறைவேற்றிய தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

### கொண்டுவர வேண்டாம்

கொழும்பு, வெள்ளி

மாவட்டசபை மசோதாவைப் பாராளுமன்றத்தில் கொண்டுவர வேண்டாம் என்று பிரதமரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஹெட்டிபொல கிராமசபையால் ஏகமனதாக நிறைவேறியது.

### 'ஐக்கியத்தை சீர்குலைக்கும்'

உடுநுவர, வெள்ளி

மாவட்டசபை மசோதா கொண்டுவரப்பட்டால், சிங்கள இனத்திற்கு பெரும் அழிவு நேருவதுமட்டுமன்றி நாட்டில் வாழும் மக்களிடையே உள்ள ஐக்கியத்தை குலைக்கும் என்று அக்குரல் எம்.பியான டாக்டர் எஸ். ஏ விக்கிரமசிங்க இங்கு நடைபெற்ற கூட்டத்தில் பேசும் போது கூறினார்.

பல்வேறு இனங்களை கொண்ட இந்நாட்டின் ஐக்கியத்தை குலைப்பதற்கு அமெரிக்க முதலாளித்துவ வாதிகளின் ஆலோசனைப்படி உருவாக்கப்பட்டதுதான் இந்த மாவட்டசபை மசோதாவென்றும் அவர் மேலும் கூறினார்.

### வெள்ளை அறிக்கை அர்த்தமற்றது

பண்டாரவளை, வெள்ளி

மாவட்டசபை பற்றிய வெள்ளை அறிக்கை அர்த்தமற்றதென்றும் வெள்ளை அறிக்கையை சமர்ப்பித்த தேசிய அரசாங்கம் மக்களை ஏமாற்றப் பார்க்கிறதென்றும், பண்டாரவளை எம்.பி திரு. ஆர். எம். அப்புஹாமி இங்கு நடந்த கூட்டமொன்றில் பேசும்போது கூறினார்.

### பிரிவினைக்கு வழிவகுக்கும்

ஹொரணை, வெள்ளி

மாவட்டசபை மசோதா இந்நாட்டை தமிழரசுக் கட்சியினர் பிரிவினை செய்ய வழிவகுக்கும் என்று ஹொரணை எம் பி. திரு. இரத்னசிறி விக்கிரமநாயக்கா இங்கு நடந்த கூட்டமொன்றில் பேசும்போது கூறினார்.

## "மீட்டுத்தர வேண்டும்"

உடுப்பிட்டி, வெள்ளி

"1962-ம் ஆண்டு இப்பாடசாலைக்குச் சேர வேண்டிய நிலம் ஆறு பரப்பாக இருந்த பொழுதிலும் இப்பொழுதே மூன்று பரப்புக் காணியே பாடசாலை உபயோகத்திலிருக்கின்றது. மீதி 3 பரப்பையும் காணிச் சொந்தக்காரரின் ஆட்சியிலுள்ளது. எனவே சுவீகரிக்கப்பட்ட அக் காணியைத் திரும்ப மீட்டுத்தர வேண்டும்".

இவ்வாறு கோரும் மகஜரொன்றை வடமாநில வித்தியாதிபதி திரு. எம். தணிகாசலத்திற்கும், உடுப்பிட்டி எம்.பியும், உபசபாநாயகருமான திரு.மு. சிவசிதம்பரத்திற்கும், காணிச் சொந்தக்காரர் அட்வகேட் திரு. இ. சிவபாதசுந்தரத்திற்கும் அனுப்பி வைப்பதெனக் கரணவாய் தெற்கு மணியகாரன் தோட்டம் சைவப் பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சங்கக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலணிவிவகாரம்

# 'யாழ். உதைபந்தாட்டச்சங்கம் பாரபட்சமாக நடக்கிறது'

## ஐக்கிய கழகங்களின் சம்மேளனம் கண்டனம்

யாழ்ப்பாணம், சனி
வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உதைபந்தாட்டக் காலணி விவகாரத்தில் யாழ். உதைபந்தாட்டச்சங்கம் பாரபட்சமான முறையில் நடந்து விட்டதாக யாழ்ப்பாணம் ஐக்கிய கழகங்களின் சம்மேளனம் குற்றஞ்சாட்டியுள்ளது.

யாழ். உதைபந்தாட்டச் சங்கத்திலிருந்து வெளியேறி 16 விளையாட்டுக்கழகங்கள் புதிதாக அமைத்துக் கொண்ட யாழ். ஐக்கிய கழகங்களின் சம்மேளனத்தின் நிர்வாகசபை திரு. என். எஸ். தாக்கி தலைமையில் கூடியது. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:

"யாழ். ஐக்கிய கழகங்களின் சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் 16 கழகங்களில் பெரும்பான்மையானவை 11 மாதங்களுக்கு முன்னர் யாழ். உதைபந்தாட்டச்சங்கத்தில் அங்கம் வகித்தபோது சங்க பொருளாளரிடம் காலணிகள்பெறுவதற்காக பணம்செலுத்தின. இப்போது வெளிநாட்டிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்ட காலணிகள் விநியோகத்தில் பெருத்த பாரபட்சம் காட்டப்பட்டுவிட்டது. இந்தச் சர்வாதிகாரப் போக்கினை எமது சம்மேளனம் வெகுவாகக் கண்டிக்கிறது."

## இன்றைய பலன்

[8 - 6 - 68]

வைகாசி மீ 26 உ

சனிக்கிழமை

திதி - துவாதசி பகல் 9-23 மேல் சதுர்த்தசி.

நட்சத்திரம்- சுவாதி பகல் 12-46 மேல் விசாகம்.

ராகுகாலம் - 8-52— 10-22.

சுபநேரம் - 2-52— 4-22.

இன்று பிறந்தவர்களுக்கு வேண்டாத நட்பால் விபரீதங்கள் விளையலாம். நன்றாகச் சிந்தித்த பின்பு செயலாற்றவும். கடன் தொல்லை கவலையைத் தரும். எனினும் எதிர்பாராத பொருள் வரவுக்கும் இடமுண்டு. மாதர்களாயின் மனை வாழ்வில் சந்தேகம் உருவாகக் கூடும். கடமையாற்றும் இடத்தில் பொறுமைக்கு இடமுண்டு. மேலதிகாரியின் கண்டிப்பு உங்கள் பொறுமையைச் சோதிக்கும். மாணவர்களாயின் கல்வியில் கவனம் செலுத்துவதுடன், கண்ணியமாக நடந்துகொள்ளவும்.

மேஷம்- அன்பு வலை, ஆனந்த நிலை.

ரிஷபம்- விஷமப் பார்வை. வீண்முயற்சி.

மிதுனம்- தெய்வ நம்பிக்கை, தேடி வரும் உறவு.

கடகம்- வேடிக்கைப் பேச்சு, தொழில் சிறப்பு.

சிம்மம்- போதுமென்ற மனம், மதிப்பு உயரும்.

கன்னி- தடுமாறும் நெஞ்சம், தாமதமிகுதி.

துலாம்- காகிதக் கப்பலில் கரைசேரமுடியாது.

விருச்சிகம்- வெள்ளிப் பணம் துள்ளும், வேண்டியது கிடைக்கும்.

தனுசு- ஆசை வைக்காதே அவதிப்படாதே.

மகரம்- வீண்பொருள், விருத்தி, விருந்துமுண்டு.

கும்பம்- உள்ளம் துள்ளும் உவகைக்கூத்து.

மீனம்- நோவுக் கணை தொடுப்பார் விழிப்புடன் இரு.

— சோதிடக் கலாநிதி —

திருமலை வேலுப்பிள்ளை

## க்ஷயரோகப் போட்டிகள்

சுழிபுரம், வெள்ளி
வலிகாமம் மேற்கு க்ஷயரோக நிவாரண தேசிய சங்கத்தினர் க்ஷயரோகப் போட்டிகளை நடாத்த ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளனர்.

க்ஷயரோக எழுத்துப் போட்டி, கட்டுரைப் போட்டி, சித்திரப்போட்டி முத்திரைப் போட்டி ஆகிய அம்சங்கள் போட்டியில் முக்கியமாகவுள்ளன. இப்போட்டி பாடசாலைகள், கல்லூரிகள், சனசமூக கிராம முன்னேற்றச் சங்கங்கள் மற்றும் சங்கங்கள் ஆகியவற்றுக்குள்ளேயே நடைபெறவுள்ளன.

போட்டிக்கான சகல ஒழுங்குகளையும் சங்கச் செயலாளர் திரு. உ. ந. தேவகடாச்சம் கவனித்து வருகின்றார்.

## திருக்குறள் மகாநாடு

உடுப்பிட்டி, சனி
கருணையம்பதி இளைஞர் முன்னேற்றக் கழகத்தினரின் 12-வது திருவள்ளுவர் நினைவுவிழா நாளையும், நாளைமறுதினமும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கரணவாய் உபதபாற்கந்தோருக்கு அருகாமையில் அமைக்கப்பட்ட சேர். பொன்னம்பலம் இராமநாதன் அரங்கில் இத்திருக்குறள் மகாநாடு நடைபெறும். இவ்விழாவில் கலைமகள் ஆசிரியர் திரு. கி.வா. ஜகந்நாதன் பிரதம பேச்சாளராகக் கலந்து கொள்வார்

9-ந்திகதி விழாவிற்கு ஈழநாடு ஆசிரியர் திரு. கே. பி. ஹரன் தலைமை வகிப்பார்.

இரண்டாம்நாள் நிகழ்ச்சிகளுக்கு உபசபாநாயகரும், உடுப்பிட்டி எம். பியுமான திரு. மு. சிவசிதம்பரம் தலைமை தாங்குவார்,

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

சனி 8-6-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் அல் 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் அல் 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் அல் 61 மீற்றர்

மாலை 5-00 [illegible] சேவை, 5-15 [illegible] வாழ்த்து [illegible] 5-30 [illegible]

## "இயற்கையோடு இயைந்தது சைவ சமயம்"

காரைநகர், வெள்ளி
"சிவலிங்க வழிபாடு மிக முக்கியமானது. ரஷ்யா, எகிப்து, அரேபியா முதலான பல தேசங்களில் சிவலிங்க வழிபாடு நடைபெற்றுவந்தது என்பதை மேலைத் தேசத்தவர்களுடைய ஆராய்ச்சி நூல்களிலிருந்து நாம் அறிகின்றோம். உலகின் பல பாகங்களிலும் விநாயக வழிபாடு இருந்து வந்ததென்பதற்குப் பல ஆதாரங்கள் உள. சைவ சமயம் இயற்கையோடு இயைந்த சமயமாகும் இம்மையிலேயே எல்லாச் செல்வங்களையும் பெற வழிவகுப்பது சைவம்" என திருக்கோயில் இதழாசிரியர் திரு. என். ஆர். முருகவேள், காரைநகர் சைவமகாசபை மண்டபத்தில் நடைபெற்ற சபை பொன்விழாவின் முதல்நாளன்று 'சைவமும் தமிழும்' என்னும் பொருள் பற்றிச் சிறப்புச் சொற்பொழிவாற்றும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சைவமகாசபைத் தேவார வகுப்பு மாணவர்களின் தேவார பாராயணத்துடன் பரமேஸ்வராக் கல்லூரி அதிபர் திரு. மு. ஞானப்பிரகாசம் தலைமையில் பொன்விழா ஆரம்பமானது.

தமிழ்க்காங்கிரஸ்

## பொதுச்சபை கூட்டம்

யாழ்ப்பாணம், சனி
தமிழ் காங்கிரஸ் பொதுச் சபைக் கூட்டம், தொழிற்சங்க சம்மேளனம் நாளை மறுதினம் நடைபெறவிருக்கின்றன. யாழ் மாநகரசபை மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இக் கூட்டத்திற்கு திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் தலைமை வகிப்பார். (ந.நி.)

## இலவச சிற்றுண்டி

யாழ்ப்பாணம். சனி
மாங்குளம் காணி அபிவிருத்திப் புண்ணிய சங்கம். மாங்குளம் காணி அபிவிருத்தி அலுவலக வாயிலில் 1-ம் திகதி முதல் மூன்று நாட்களுக்கு போசன் யாத்திரீகர்களுக்கு இலவச சிற்றுண்டி வழங்க ஏற்பாடு செய்துள்ளது.

## பரிசளிப்பு விழா

குரும்பசிட்டி வெள்ளி
தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் கல்லூரி ஸ்தாபகர் தெ. துரையப்பாபிள்ளை நினைவு விழாவும் இம்மாதம் 24-ம் திகதி கல்லூரி திறந்தவெளியரங்கில் நடைபெறவிருக்கின்றது.

## நீதிபதி இடமாற்றம்

முல்லைத்தீவு, வெள்ளி
முல்லைத்தீவு மேலதிக நீதிபதியாகவும் கிராமாந்தரக் கோட்டு நீதிபதியாகவும் கடமையாற்றிய திரு. கே. வி. நவரத்தினம் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் மன்னார் மேலதிக மாவட்ட நீதிபதியாகவும் மாஜிஸ்திரேட்டாகவும் மாற்றலாகிச் செல்கிறார்.

நேயர்விருப்பம்.

இரவு 6-15 தாளவாத்தியக்கச்சேரி, 6-45 பாவனம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 முத்திநெறி - சைவ சஞ்சிகை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பல்கலைக் கழக விரிவுரை, 9-45 [illegible]

# பேராசிரியர், 'யாழ்ப்பாணன்' மறைவுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், சனி
"தமிழ்மரபைக் கட்டிக் காத்து நின்ற ஒரு தூண், பேராசிரியர் கணபதிப்பிள்ளை. அவர் மறைவு தமிழ் உலகு ஈடுசெய்யமுடியாத ஒன்று" என பேராசிரியர் கணபதிப்பிள்ளையினதும், கவிஞர் யாழ்ப்பாணனதும் மறைவு குறித்து யாழ். இலக்கிய வட்டம் நடாத்திய அனுதாபக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசிய கவிஞர் வி. கந்தவனம் குறிப்பிட்டார். யாழ்ப்பாண மாநகரசபை பொழுதுபோக்கு மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கவிஞர் கந்தவனம் மேலும் பேசியதாவது:

"பேராசிரியர் கணபதிப்பிள்ளை தமிழுக்கு ஆற்றிய தொண்டு அளப்பரியது. கடந்த முப்பது ஆண்டுகளாக ஈழத்துத் தமிழ்த் துறைக் கல்விப்பீடத்திற்குத் தலைமைதாங்கிப் பல்வேறு மனப்பான்மையுடன் பல்கலைக்கழகத்தை அடையும் தமிழ் இளைஞர்களுக்குத் தமிழார்வம் ஊட்டி, அதன் காரணமாகத் தமிழர் மத்தியில்விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திய பெருமை அவரைச் சாரும். நாடகத்துறையிலும், கவிதைத்துறையிலும் பேராசிரியர் செய்த ஆக்கபூர்வமான முயற்சிகள் ஈழத் தமிழுலகுக்கு ஏற்றமளித்துள்ளன."

கவிஞர் யாழ்ப்பாணன் பற்றி அவர் பேசுகையில், "ஈழத்தாய் பெற்றெடுத்த சிறந்த கவிஞர்களுள் யாழ்ப்பாணனும் ஒருவரென்றும் அன்னாரின் மறைவு, கவிதைத்துறைக்கு மட்டுமன்றிப் பாடநூற் பிரசுரத்துறைக்கும் ஒரு பேரிழப்பாகும் என்றும், அவரது கவிதைகளிலுள்ள இனிமையும் எளிமையும் கற்பனை நயமும் அவரை என்றென்றும் வாழவைக்கும் என்பதில் ஐயமில்லை" என்றும் சொன்னார்

திரு. சே குணராஜா, கவிஞர் செ. சுந்தரம்பிள்ளை. இரசிகமணி கனக. செந்திநாதன் ஆகியோரும் உரையாற்றினர். (ந. நி)

# "சைவசமயத்துக்கு புத்துயிர் அளிக்கவேண்டும்"

## உதவி அரசாங்க அதிபர் கூறுகிறார்

குரும்பசிட்டி, வெள்ளி
"தென்னிலங்கைப் பகுதியில் பௌத்த மக்கள் மத கோட்பாடுகள் தத்துவங்களை நன்கு அனுஷ்டித்து பௌத்த ஆலயங்களை தீவிரமான புனருத்தாரணம் செய்துவருகின்றனர். இதே போன்று சைவ சமயத்தை மீண்டும புத்துயிர் அளித்து முன்னேற்ற நிலைக்குக் கொண்டுவந்து எதிர்காலச் சந்ததியினர் சிறந்த நல்வாழ்வு வாழ வழி செய்தல் வேண்டும்"

இணுவில் கந்தசுவாமி கோவில் மஞ்சப் புனருத்தாரண விழா வைபவத்தில் கலந்துகொண்டு பேசுகையில் யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளைமேற்கண்டவாறுகுறிப்பிட்டார். உள்ளூராட்சி [illegible]மைச்சர் திரு. எம். திருச்செல்வம் மஞ்சப் புனருத்தாரண அச்சினை ஏற்றி வைத்தார்.

திரு. முருகேசம்பிள்ளை மேலும் கூறியதாவது: சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் பகுதிகளிலுள்ள சைவ ஆலயங்கள் ஒல்லாந்தரினால் தரைமட்டமாக்கப்பட்டு அழித்துநாசப் படுத்தப்பட்டன. இவற்றில் பல ஆலயங்கள் இன்னும் அழிந்த நிலையில் இருக்கின்றன. எனினும் தற்போது சைவம் தலைநிமிர்ந்து மறுமலர்ச்சி பெற்றுவருவதையிட்டு சுதந்திரம் பெற்று 20 ஆண்டுகளின் பின்னராவது நாம் மனமகிழ்ச்சியடைய வேண்டும் பிற சமயத்தவரும் ஏனைய தேசத்தவரும் தமிழர் சைவர்களின் கலை நுட்பங்கள், கலாச்சார பண்பாடுகளை நன்கு அறிய ஆலயங்கள் புனரமைப்பு செய்யப்படவேண்டும். ஆலயத் திருப்பணிகளுக்கு தமிழர்கள் சாதி வேறுபாடுகளின்றி ஆதரவு ஒத்துழைப்பு அளித்தல் வேண்டும்.

## 10-வது ஆண்டு விழா

யாழ்ப்பாணம், சனி
தெல்லிப்பழை மாவை கொல்லங்கலட்டி அருள் நெறிக்கழகத்தின் 10-வது ஆண்டுவிழா இம்மாதம் 10-ம் திகதி வரை நடைபெறவிருக்கிறது.

இன்று திருஞானசம்பந்த தேசிகரால் சமய தீட்சை அளிக்கப்படும். [ந.நி]

## ஓய்வு பெற்றார்

யாழ்ப்பாணம், சனி
தொலைபேசிப் போக்குவரத்து சுப்பிரிண்டன் திரு. எஸ், நல்லையா தமது [illegible] வருட சேவையின்பின் ஓய்வுபெறுகிறார்.

## திடீர் மறைவு

வவனியா, வியா.
வவனியாப் பண்ணை முகாம் அதிகாரியின் மகனை சுப்பிரமணியம் நடராசா [வயது 16] என்பவர் திடீரென மர்மமாக மறைந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

## மாணவர் மோதல்

### ஒருவர் ஆஸ்பத்திரியில்

உடுப்பிட்டி, வெள்ளி
இரு மாணவர்களிடையே ஏற்பட்ட மோதலில் ஒரு மாணவன் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

நெல்லியடியிலுள்ள மகாவித்தியாலயமொன்றில்கல்வி கற்கும் இரு மாணவர்களிடையே சண்டை மூண்டதாகவும் இச் சண்டையின் போது ஒரு மாணவன் மற்ற மாணவனுக்குக் கொம்பாஸ் ஆணியால் குத்தியதாகவும் [illegible] காயமுற்ற மாணவன் யாழ் பெரியாஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

## தாச்சி சுற்றுப் போட்டி

கிளிநொச்சி, வெள்ளி
கிளிநொச்சி விளையாட்டுச் சபை கரைச்சிக் காரியாதிகாரி பிரிவிலுள்ள சகல விளையாட்டுக் கழகங்களும், சனசமூக நிலையங்களும், கிராம முன்னேற்றச் சங்கங்களும் அடங்கிய தாச்சிச் சுற்றுப் போட்டி ஒன்றை நடாத்த முன்வந்துள்ளது

இப் போட்டியில் வெற்றி பெறும் கோஷ்டியினருக்கு கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினத்தின் வெற்றிக் கேடயம் வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஷ்டிக்கட்சியை தடை செய்ய வேண்டுமாம்

## பார்லிமெண்டில் இலங்கரத்தினு கோரிக்கை

கொழும்பு, வியாழன் "தமிழரசுக் கட்சியைத் தடைசெய்யவேண்டும்" என்று கொலன்னாவ எம். பி திரு டி. பி இலங்கரத்தினு இன்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் கேட்டுக்கொண்டார்.

மக்கள் பிரதிநிதிகள் சபை இன்று பிற்பகல் 2 மணிக்குக் கூடியது. அவசரகாலச்சட்ட ஆழலை நீக்க வேண்டுமெனக் கோரும் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இப்பிரேரணையைக் கொண்டுவந்த திரு. இலங்கரத்தினு பேசுகையில் 'தமிழ் அரசு' ஒன்றை இந்த நாட்டில் அமைப்பதற்காக சமஷ்டிக்கட்சியினர் முயற்சி செய்கின்றனர் என்றும் இதற்கு தாங்கள் ஒருபோதும் இடங்கொடுக்கப்போவதில்லையென்றும் கூறினர்.

"சமஷ்டிக்கட்சி ஒரு வகுப்புவாதக் கட்சி. அது நாடு முழுவதும் வகுப்புவாதப்பிரசாரம் செய்து வருகிறது. நாட்டைப் பிழவுபடுத்தி 'தமிழ் அரசு' எனத் தனி அரசு ஒன்றை அது அமைக்க முயற்சி செய்கிறது. ஒரே நாடு என்பதுதான் எங்கள் கொள்கை. நாட்டைப் பிரிக்கவோ பிளவுபடுத்தவோ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒருபோதும் அனுமதிக்காது. நாங்கள் வகுப்புவாதிகளல்ல. எங்களுக்கு வகுப்புவாத நோக்கமில்லை யாது. இந்நாட்டு மக்கள் அனைவரும் ஒருவர், அனைவரும் ஐக்கியமாக வாழவேண்டும் என்பதே எங்கள் கொள்கையும் நோக்கமுமாகும்" என்று திரு. இலங்கரத்தினு கூறினர்.

சமஷ்டிக் கட்சியினருக்கு இடம்கொடுப்பது இந்நாட்டில் வகுப்புவாதத்துக்கு ஆதரவு அளிப்பதாகும் என்று கூறிய திரு. இலங்கரத்தினு சமஷ்டிக்கட்சியை தடைசெய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இந்த அரசாங்கம் ஆளும் கட்சிக்குவந்து மூன்று வருடங்கள் மூன்று மாதங்களாகின்றதென்றும் இதில் 882 நாட்கள் அவசரகாலநிலைமை அமுலிலிருந்திருக்கிறதென்றும் கூறினர்.

# எதிர்க்கட்சியின்ரின் முயற்சி பலித்தது

கொழும்பு, வியாழன் மக்கள் பிரதிநிதிகள்சபை இன்று கூடியபோது அவசரகாலச்சட்டத்தை நீக்க வேண்டுமெனக்கோரும் தங்கள் பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று எதிர்க்கட்சியினர் கோரினர்.

இன்று தனிநபர் தினமாகையால் எதிர்க்கட்சியினரின் பிரேரணைகள் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. எதிர்க்கட்சியினரின் பெயரிலிருந்த பிரேரணைகளில் முதலாவதாக திரு. ஆர்.பி. சில்வா பற்றிய லஞ்சக்கமிஷன் குறிப்பு பற்றிய பிரேரணையாகும். இந்தப்பிரேரணையையே முதலில் விவாதத்துக்கெடுத்துக் கொள்ள வேண்டுமென்று அரசாங்கத்தரப்பினர் கூறினர். ஆனால் இரண்டாவதான அவசரகாலச்சட்டத்தை நீக்கவேண்டுமென்ற தங்கள்பிரேரணையை முதலில் விவாதத்துக்கெடுத்துக் கொள்ள வேண்டுமென்று கோரினர்.

எந்தப்பிரேரணையை முதலில் விவாதத்துக்கெடுத்துக் கொள்ளவேண்டுமென்பதை வாக்கெடுப்புக்கு விடலாமென அரசாங்கத்தரப்பினர் கூறியயோசனையின்படி வாக்கெடுப்புக்கு விட்டபோது எதிர்க்கட்சியினரின் கோரிக்கைக்கு ஆதரவாக அதிகவாக்குகள் கிடைத்தன. இதன்பின்னர் அவசரகாலச்சட்டத்தை நீக்க வேண்டுமெனக் கோரும் எதிர்க்கட்சிப்பிரேரணை மீது விவாதம் ஆரம்பமானது.

## சபையில் அறிக்கைவிட எதிர்க்கட்சித்தலைவர்கள் கோரிக்கை

கொழும்பு, வியாழன் மாவட்டசபை நகல் மசோதாவை ஷரத்துவாரியாகப் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா, நாளைக்காலை நடைபெறவிருக்கும் ஆளும் கட்சிக்கூட்டத்தில் விபரமாக விளக்கிக்கூறவிருக்கிருர்.

இம்மாதம் 8ந் திகதி மக்கள் பிரதிநிதிகள் சபையில் மாவட்டசபைகள் பற்றிய வெள்ளை அறிக்கைமீதுவிவாதம் தொடங்குவதற்குமுன் சபையில் அறிக்கை விடுவதற்கு தங்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்கவேண்டுமென்று எதிர்க்கட்சித்தலைவர் திருமதி சிறிமாபண்டாரநாயகா டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா, டாக்டர் கொல்வின் ஆர்.டி.சில்வா ஆகியோர் சபாநாயகரைக் கோரியிருப்பதாகத்தெரிகிறது. டாக்டர் என்.எம்.பெரேரா வெளிநாடு சென்றிருக்கிருர்

சபையில் அறிக்கை விடுவதற்கு மூவருக்கும் அனுமதி வளிக்கப்படவில்லையானுல் பத்திரிகைகளுக்கு மூவரும் கூட்டறிக்கை விடுத்துவிட்டு ஹைட்பார்க்கில் நடைபெற ஒழுங்குசெய்திருக்கும் கூட்டத்தில் கலந்துகொள்வார்களெனத் தெரிகிறது. பொதுக்கூட்டத்துக்கு இன்னும் அனுமதி கிடைக்கவில்லை.

# ஐந்து வருட கடுழியசிறைத் தண்டனை கிடைத்தது

யாழ்ப்பாணம், வெள்ளி சட்டவிரோதக் குடியேற்றக்காரர் 10 பேரை வீட்டில் வைத்திருந்தவருக்கு 5 வருடக் கடுழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு. கே. விக்கினராசா இத்தண்டனையை விதித்தார்.

பருத்தித்துறை அல்வாய் வடக்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை யோககுரு என்பவர் 10 சட்டவிரோதக்குடியேற்றக்காரர்களை வீட்டில் சட்டவிரோதமாக வைத்திருந்ததாக இவ்வழக்கு பொலிசாரால் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. (கா. நி.)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சின்னக்கோவில் மேல் வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் [illegible] 1968-ம் ஆண்டு ஜூன் மாதம் 8-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# ராமானுஜம் சட[illegible]

## கண்டியில்தகனம்

கண்டி, வியாழன் இலங்கையில் பழம்பெரும் தொழிற்சங்கப் பிரமுகர்களில் ஒருவரும், முன்னுள் களுத்துவரை எம்.பி யுமான திரு. டி. ராமானுஜத்தின் சடலம் இன்றுமாலை கண்டியில் தகனம் செய்யப்பட்டது. சிங்கப்பூரில் காலமான திரு ராமானுஜத்தின் சடலம் இன்றுகாலை சிங்கப்பூரிலிருந்து விமானத்தில் கட்டுநாயக்கா விமான நிலையத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இன்றுகாலை நேராகக் கண்டி கொண்டுவரப்பட்ட சடலம் அரசியற் தலைவர்கள், பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முக்கிய தலைவர்களில் ஒருவராக இருந்தவரென்பது குறிப்பிடத்தக்கது.

## தேசியசுவீப் முடிவுகள்

நேற்று இழுக்கப்பட்ட தேசிய லொத்தர்சபையின் 197-வது சுவீப் முடிவுகள் வருமாறு:-

**1-வது பரிசு**
34 E 0087 ரூ 100,000

**2-வது பரிசு**
42 B 0588 ரூ 40,000

**3-வது பரிசு**
26 D 0919 ரூ. 10,000

தலா ரூ. 610 பெறும் 100 டிக்கட்டுகள் விபரம்:

| | |
|---|---|
| 45 Q 0317 | 27 N 0066 |
| 34 U 0790 | 23 W 0756 |
| 23 G 0716 | 31 G 0737 |
| 18 U 0216 | 20 X 0892 |
| 27 A 0329 | 37 Z 0584 |
| 07 R 0785 | 25 H 0143 |
| 39 Q 0745 | 23 T 0102 |
| 08 O 0547 | 28 H 0329 |
| 04 P 0957 | 36 C 0080 |
| 25 H 0572 | 45 V 0580 |
| 14 N 0815 | 33 U 0305 |
| 40 B 0996 | 29 S 0536 |
| 42 Q 080[illegible] | 21 Q 0072 |
| 40 G 0565 | 43 E 0730 |
| 26 C 0916 | 33 M 0087 |
| 35 S 0809 | 12 o 0593 |
| 09 A 0024 | 08 M 0261 |
| 02 G 0392 | 28 K 0227 |
| 06 C 0994 | 43 U 0296 |
| 16 X 0762 | 26 J 0462 |
| 08 W 0082 | 45 A 0429 |
| 01 N 0573 | 1 D 0981 |
| 01 Y 0064 | 32 G 0388 |
| 27 S 0741 | 13 F 0588 |
| 12 L 0790 | 37 A 0979 |
| 41 Y 0812 | 32 Q 0998 |
| 23 C 0777 | 20 P 0244 |
| 16 Z 0418 | 23 T 0710 |
| 39 X 0407 | 24 o 0841 |
| 23 F 0477 | 11 U 0320 |
| 32 o 0606 | 06 M 0191 |
| 35 T 0463 | 12 L 0794 |
| 38 N 0130 | 40 Q 0133 |
| 17 A 0765 | 02 R 0746 |
| 10 G 0069 | 16 T 0656 |
| 32 P 0938 | 13 o 0757 |
| 48 J 0794 | 44 V 0941 |
| 14 o 0922 | 33 V 0202 |
| 32 C 0914 | 12 V 0461 |
| 03 A 0372 | 12 L 0040 |
| 02 B 0737 | 32 T 0275 |
| 38 R 0529 | 12 V 0223 |
| 14 E 0270 | 45 G 0168 |
| 23 C 0253 | 09 D 0779 |
| 11 T 0433 | 31 V 0279 |
| 36 Q 0702 | 19 F 0500 |
| 25 B 0755 | 27 H 0137 |
| 17 Q 0246 | 30 H 0076 |
| ε1 B 0827 | 46 L 0043 |
| 29 E 0218 | 16 Z 0597 |

(இவை உறுதிப்படுத்த வேண்டும்)

தேயிலை ஏற்றுமதி

## கூட்டு நிறுவனம் உடன்படிக்கை

புதுடில்லி, ஏப். 6 வெளிநாடுகளுக்கு தேயிலை ஏற்றுமதி செய்வதற்கு கூட்டுநிறுவனம் நிறுவுவதற்கு இலங்கை இந்திய அதிகாரிகள் இன்று இங்கு உடன்படிக்கை [illegible] கொண்டார்கள்

# நி[illegible]மையை சமாளிக்க.........

[1ம் பக்கத் தொடர்ச்சி] களுக்கு இராணுவத்தினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். நாட்டின் பல பகுதிகளில் அவசரகாலநேரத்தில் பொலிசார் எவ்விதம் நடந்து கொள்ளவேண்டுமென்பது பற்றி ஒத்திகை நடத்தப்பட்டது. கொழும்பிலும் இதர முக்கியமான இடங்களிலும் ஆயுதந்தாங்கிய பொலிசார் காவல் புரிகின்றனர். மக்கள் பிரதிநிதிகள்சபைக் கட்டிடத்தைச்சுற்றிபலத்த பொலிஸ் காவல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

# வெள்ளையறிக்கையும் அடுத்த தேர்தலும்

## தமிழ்க்காங்கிரஸ் நாளை ஆராயும்

யாழ்ப்பாணம், சனி மாவட்ட சபை வெள்ளை அறிக்கை பற்றி முடிவு செய்யவும் அடுத்த பொதுத்தேர்தலுக்கான பிரசார வேலைகளை துரிதப்படுத்துவதற்காகவும், தமிழ்க் காங்கிரஸ் பொதுச்சபை நாளை காலை யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் கூடுகிறது என கட்சிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

தமிழ்க்காங்கிரஸ் பொதுச் சபை வாலிப முன்னணி பொது சபை ஆகியவற்றை சேர்ந்த சுமார் 400 உறுப்பினர்களுக்கு நேற்று அழைப்பு அனுப்பப்பட்டுள்ளதாம்.

தமிழ்க்காங்கிரஸ் பாராளுமன்றக் குழுவின் ஆலோசனைக் கூட்டத்தைத் தொடர்ந்து பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும்.

மாவட்ட சபை வெள்ளை அறிக்கையும், மாவட்ட சபை நிர்மாண விதிகளும் பற்றி திரு. ஜி. ஜி பொன்னம்பலம் பொதுச்சபைக்கு விளக்கிக் கூறுவார்.

அடுத்த பொதுத்தேர்தல் பிரசாரத்திற்கென தொகுதிகள் தோறும், கிளைகளைத் துரிதப் படுத்துவதற்கென இக்கூட்டத்தில் உத்தியோகத்தர்கள் தெரிவுசெய்யப் படுவார்கள் என்று கட்சிப் பிரமுகர் தெரிவித்தார்,

பாராளுமன்ற வாக்காளர் ஏடு பதிவுசெய்வதற்கு கட்சியின் உதவியாளரும் தெரிவு செய்யப்படுவார்களாம்.

அவசரகால சட்டத்தின் கீழ் பொருட்கள் தடைச்சட்டத்தை யாழ்ப்பாண குடாநாட்டுக்கு விதித்ததை ஆட்சேபித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப்படும் என்றும் வருடாந்த மகாநாட்டிற்கான ஒழுங்குகள் பற்றியும், மகாநாடு நடத்தும் இடம் பற்றியும் முடிவுசெய்யப் படும் என்றும் அவர் சொன்னார்.

# தொழிற்சங்கசம்மேளன எதிர்ப்புக் கூட்டம்

உத்தேச மாவட்டசபை வெள்ளை அறிக்கையைக் கண்டித்து அகில இலங்கை ஐக்கிய தொழிற்சங்க சம்மேளனம் இலங்கை தேசிய அரசாங்க சேவையாளர் தொழிற்சங்க சம்மேளனம் ஆகியவற்றின் பொதுக்கூட்டம் இம்மாதம் 10-ம் தேதி யாழ்ப்பாணத்தில் நடைபெறுமென்று இச் சம்மேளனப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் வவுனியா எம்.பி. திரு. ரீ. சிவசிதம்பரம் ஆகியோரும் கலந்துகொள்வார்கள்.

தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு சிங்களம் படிக்கக் கொடுக்கப்பட்ட கால எல்லையை மேலும் 7 வருடங்களுக்கு நீடிக்குமாறு அரசாங்கத்தைக் கோரும் பிரேரணை ஒன்றும் இக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும்.

பாவனைப்பொருள் கட்டுப்பாட்டுத் திட்டத்தை கண்டித்தும் கிருஷிகப் பண்ணை தொழிலாளர்கள் நிர்வாகிகளால் தாக்கப்படுவதை கண்டித்தும் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்படும்.

## நாட்டிலும் நகரிலும்

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

அழுக்கு, தூசி உள்ளே போகாதவண்ணம் சட்டியை மூடி 'செல்லோபேஸ்' பேப்பர், அது விழுந்துபோகாமலிருக்க ஒரு ரப்பர் நாடா. தயிரைக் கொண்டுவந்து கடையில் கொடுப்பவருக்கு கூலி. இப்படி எல்லாச் செலவுகளும் போக தமக்கு ஒரு சட்டிக்கு சுமார் 30, 35 சதந்தான் மிஞ்சுகிறதாம். ஒரு சட்டி தயிரை இரண்டேகால் ரூபாய்க்கு அவரிடம் வாங்கி விற்பனவுஇலாகா இரண்டரை ரூபாய்க்கு விற்கிறது.

இரண்டு மூன்று நாட்களுக்குள் இப் பசுந்தயிருக்கு பிரமாதமான கிராக்கி ஏற்பட்டுவிட்டது. இன்றுவரை ஒரு சட்டியாவது மிஞ்சவில்லை. இவர் கொடுப்பது ஆக பத்து சட்டி தயிர்தான. ஆனுல் சிலர் கலியாண வீடுகள் தண்ணீர்ப்பந்தல் போன்ற வைபவங்களுக்கு 25 30ம் கேட்கிருர்களாம்.

பிறநாடுகளுடன் ஒப்பிடும்போது நமது இலங்கையில பாலுணவுகளான தயிர், மோர், நெய், வெண்ணை முதலியவற்றை உட்கொள்ளல் மிகக் குறைவு. இதற்கு காரணம் போதிய பாலுணவு மலிவான விலையில் கிடைக்காதபடியால்.

நல்ல இன மாடுகளை வளர்த்து சிறந்த பாலுணவுகளை உற்பத்திசெய்வதற்கு தனிப்பட்ட பண்ணைக்காரர் பலர் முன்வரவேண்டும். அவர்களுக்கு விற்பனவுப் பகுதிபோன்ற அரசாங்க ஸ்தாபனங்கள் நிறைய ஊக்கம் அளிக்கவேண்டும்

— வழிப்போக்கன்.

## ஏகமனதாக நிறைவேறி[illegible]

களனி, [illegible] தளுகம பட்டினசபை[illegible] கூட்டம் திரு ஆர். எஸ். பெரேரா தலைமையில் நடைபெற்றபோது மாவட்ட சபை மசோதாவிற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று ஏகமனதாக நிறைவேறியது.

## இள[illegible] மரணம்

யாழ்ப்பாணம், வெள்ளி மயக்கமுற்றநிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட நீலாயதேவி (20 வயது) என்ற இளம்பெண் மயக்கம் தெளியாமலேயே நேற்றுமாலை மரணமானுர். இவர் தற்கொலை செய்திருக்கலாமெனச் சந்தேகிக்கப் படுகின்றது. மரண விசாரணை நடைபெறுகின்றது. (கா. நி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org